KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 137 குரோதி வருடம், மார்கழி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(31.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 29, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 16

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

## ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிப்பு



அடுத்த ஆண்டுக்கான (2025) ஓய்வூதியம் வழங்கும் திகதிகளை ஓய்வூதிய திணைக்களம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தத் தகவல் ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் கையொப்பமிட்ட சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனவரி, பெப்ரவரி, மார்ச், செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான ஓய்வூதியங்கள் 10ஆம் திகதியும் ஏப்ரல், மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான ஓய்வூதியங்கள் 09ஆம் திகதியும் ஓகஸ்ட் மாதத்துக்கான ஓய்வூதியம் 07ஆம் திகதியும் வழங்கப்படுமென ஓய்வூதிய திணைக்களம் அறிவித்துள்ளது.

### - மக்கள் குறைகளைக் கேட்குமாறு கோரி -

# ஆளுங்கட்சி எம்.பியின் அலுவலகம் முற்றுகை!

## பொலிஸார் விரைந்ததால் நிலைமை கட்டுக்குள்



»02 பக்கம்

## காடுகள் மாறினாலும் புலிகளின் புள்ளி மாறா

### எச்சரிக்கின்றார் அம்பிட்டிய தேரர்



வடக்கு, கிழக்கிலுள்ள சில இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே, பாதுகாப்புத் தரப்புகள் விழிப்பாகவே இருக்கவேண்டும் - என அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

“மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில்தான் நந்திக் கடலில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர்கொண்ட அழுத்தங்கள் ஏராளம்.

» 02 பக்கம்



## தனியார் கம்பனிக்குள் புகுந்த ஆளுங்கட்சி எம்.பி.

### பிங்கிரியவில் பதற்றம்

குருநாகல், பிங்கிரியவில் அமைந்துள்ள பென்ஜி ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கோரி, ஆளுங்கட்சியின் குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சென்றதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

» 02 பக்கம்

## உஷ்



முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குடும்பத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் விடுமுறையை கழிப்பதற்காக அங்கு சென்றாரெனக் கூறப்பட்டாலும் அவர் அரசியல் அந்தஸ்து கோரப்போவதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. எவ்வாறாயினும், அது தொடர்பில் அவர் இதுவரை எதனையும் உத்தியோகபூர்வமாகச் சொல்லவில்லை.

### கமெண்ட் கந்தர்...



இந்த முற்றுகையிடுற விசயத்துல மக்களுக்கு நல்ல அனுபவம் இருக்குது பாருங்கோ...




வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் வாழும் உறவுகள் நேற்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் திங்கட்கிழமை (30) தமது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

## ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணமில்லை

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



»02 பக்கம்




»03 பக்கம்

## இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட





### - ஜனாதிபதியால் நியமனம் -

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவும் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று (30) ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் கடற்படைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் இன்று (31) தமது பதவிகளிலிருந்து ஓய்வுபெறுகின்றனர்.



# மட்டு. மாவட்டத்தில் சேவைகளைப் பெற அரசியல் தலையீடு எதுவும் இருக்காது; எமது பெயரைச் சொல்லி யார் வந்தாலும் உடனே அறியத்தாருங்கள்

## அருண் ஹேமச்சந்திரன் வலியுறுத்து








மட்டக்களப்பு விசேட நிருபர்

''மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது ஆட்சியில் எந்தவொரு அரசியல் தலையீடும் இருக்காது. அதனையும் மீறி அரசியல் ரீதியாக எமது பெயரைக் கூறிக்கொண்டு யாரும் வந்தால் உடனே எமக்கு அறியத்தாருங்கள்''- என வெளிவிவகாரப் பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திரன் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜெஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் அருண் ஹேமச்சந்திரன் தலைமையில் நேற்று (30) மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, முஹம்மட் சாலி நளீம், கிழக்கு மாகாண அரச திணைக்களங்களின் செயலாளர்கள், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்ஷனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்டத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும் காணி மோசடிகள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வனவிலங்கு பிரச்சினைகள், நீர்ப்பாசனம், கனியவள அகழ்வு, அனர்த்த முன்னாயத்த செயற்பாடுகள், கல்வி, சுகாதாரம், மீன்பிடி மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி விடயங்கள், ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

குறைபாடுகளை நிவர்த்திப்பது தொடர்பாக அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன், சில விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப் பதற்காக உப குழுக்களும் நியமிக்கப்பட்டன. அவர்களின் பரிந்துரைகளுக்கமைய முடிவுகள் எடுக்கப்படுமெனத் தீர்மானம் எட்டப்பட்டது.

# பாதாள உலக செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

சிறைச்சாலைகளில் இடம்பெறும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (30) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத் துடன் தொடர்புடைய நபர்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்த ஜனாதிபதி, அதற்காக இணையவழி (ஒன்லைன்) முறையைப் பின்பற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார்.

ஒன்லைன் முறையின் ஊடாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களைக் கண்டறிந்து அது தொடர்பான உட்கட்டமைப்பை மேம்படுத்துமாறும் ஜனாதிபதி அறிவித்தார்.

சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகேடு களில் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இதனுடன் தொடர்புள்ள அதிகாரிகளுக்கு நிறுவன மட்டத்திலான ஒழுக்காற்று நடைமுறைகளுக்கு அப்பால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் அரச பகுப்பாய் வாளர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத் தப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி அயேசா ஜினசேன, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குறைந்த செலவில் 77ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்; சுதந்திர சதுக்கத்தில் நடத்த அரசாங்கம் தீர்மானம்

## பொது மக்கள் பார்வையிடவும் அனுமதி

இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் குறைந்த செலவில் நடத்த அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இந்நிகழ்வு தேசத்தின் கௌரவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பெருமையுடனும் கம்பீ ரத்துடனும் இடம்பெறுமென பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (30) நடைபெற்ற 77ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கான முதலாவது ஏற்பாட்டுக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், 77ஆவது சுதந்திர தின நிகழ்வைக் குறைந்த செலவில் கொண்டாடுவது குறித்து கவனம் செலுத்தப் பட்டுள்ளது. கடந்த வருட நிகழ்வுக்கு 107 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முடிந்தவரை செலவுகளைக் குறைக்க ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்.

அத்துடன், சுதந்திர தின நிகழ்வைப் பார்வை யிட பொதுமக்களுக்கு அனுமதியை வழங்க எதிர்பார்த்துள்ளோம்" - என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# ஊழல் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்ட அதிபர் குறித்து அறிவித்து இரு வருடங்கள் கடந்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை

## யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களின் பெற்றோர் விசனம்

பு.கஜிந்தன்

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறி யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி, கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட பல்வேறு தரப்பினருக்கு பெற்றோரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கடந்த ஏழு வருடங்களுக்கும் மேலாக வினாசித்தம்பி சிவனேசன் பாடசாலை அதிபராக இருந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறாக வழிநடத்தி கொட்டடி சமூகத்தை ஏமாற்றி ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளமை சமூகத்தில் ஆழ்ந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுக்களை பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளாகிய நாம் ஆளுநருக்கு 27.12.2022இல் எழுத்து மூலம் அறிவித்திருந்தோம். அதன் பிரதிகள் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் ஆகியோருக்கு குறித்த கடிதம் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் எமது கோரிக்கை முறையான விதத்தில் விசாரிக்கப்பட்டு நியாயமான தீர்வு இன்றுவரை வழங்கப்படவில்லை.


அதிபர் தொடர்பாக நாம் முன்வைத்த குற்றச் சாட்டுகளாக,

இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சமைத்த உணவைப் பெற்றுக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இலைக்கஞ்சியே தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றி முறைப்பாடுசெய்த பெற்றோர்கள் அதிபரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் உணவு கணக்கை பாடசாலையில் இருந்து ஓய்வுபெற்று சென்ற பின்னரும் பிரதி அதிபரே தொடர்ச்சியாக செய்து வந்துள்ளார். உணவு கணக்கு தொடர்பாக ஆசிரியர்கள் கேள்வியெழுப்பியமையால் குறித்த உணவு கணக்கு அறிக்கை அதிபரால் காணாமலாக் கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பிரதேச செயலகத்தினாலும் பனை அபிவிருத்தி சபையினாலும் பால் வழங்கப்பட்டு வந்துள்ளது. குறித்த ஒரு நாளில் பாடசாலை ஆசிரியர் கடையிலிருந்து 10 லீற்றர் பாலை பெற்றுக்கொள் வதற்காக சென்றபோது 5 லீற்றர் பால் வேறொரு வரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை வெளிப் பட்டுள்ளது.

மாணவர்களுக்கான செயலட்டைகளை போட்டோ கொப்பி எடுப்பதற்கு ரோணர் முடிந்துவிட்டதென தொடர்ச்சியாக கூறி வந்த அதிபர், வருட இறுதியில் பாடசாலையின் கொள்வனவு குழு மதிப்பீட்டுக் குழுக்களின் சிபாரிசு இல்லாமலே ரோணரை கொள்வனவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த படிவங்களில் கையொப்பம் இடும்படி ஆசிரியர்களை வற்புறுத் தியுள்ளார். ரோணருக்கான பற்றுச் சீட்டு வவுச்சர் என்பவற்றின் திகதிகள் முரண்பாடாக உள்ளன.



இதுவரை காலமும் பாடசாலை கணக்குகளில் மாற்றப்படாத காசோலை பயன்படுத்தப்படாது தொடர்ச்சியாக சாதாரண காசோலையே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

2022இல் ஆங்கில பாடத்துக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பாடசாலை தரிசிப்புக்கு வந்த சந்தர்ப்பத்தில் பாடசாலையில் ஆங்கில பாடம் கற்பிக்கின்ற கர்ப்பிணி ஆசிரியரை மலசல கூடத்தில் வைத்து அதிபர் பூட்டியுள்ளார். நீண்ட நேரத்தின்பின் ஆசிரியரின் அலறல் சத்தம்கேட்டு ஏனைய ஆசிரியர்கள் வலய கல்விப் பணிமனைக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டு, குறித்த ஆசிரியர் மயங்கிய நிலையிலேயே மீட்கப்பட்டார்.

மறுநாள் அப்போது வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த மாணிக்கராசா விசாரணை என்ற போர்வையில் ஆசிரியர்களை சமாதானம் செய்து விடயத்தை வெளியே தெரியாது மூடி மறைத்து அதிபரை காப்பாற்றியுள்ளார். மன உளைச்சலுக்குள்ளான அந்த ஆங்கில பாட ஆசிரியர் பாடசாலையின் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே இடமாற்றம் கோரி வேறு பாடசாலைக்கு சென்றுள்ளார்.

வரலாறு பாடம் கற்பிக்கும் பெண் ஆசிரியரை மாணவர்கள் முன்னிலையில் அதிபர் மிக அருகில் சென்று தன் கையினால் அடிக்க முற்பட்டபோது ஆசிரியர் பின்பக்கமாக நகர்ந்து தப்பித்துள்ளார்.

அவர் மன உளைச்சலால் பெரிதும்பாதிப்படைந் திருந்தமையால் ஆசிரிய ருக்கு நீதிவேண்டி பாடசாலையின் சகல ஆசிரியர்களாலும் ஒப்பமிடப்பட்ட முறைப்பாடு வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்ட போதிலும் அம்முறைப்பாட்டுக்கான விசாரணை நடைபெறவில்லை.

இப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு 125,000 ரூபாவும் வர்ணம் பூசுவதற்காக 75,000 ரூபாவும் பழைய மாணவர்களிடம் அதிபர் தனிப்பட்ட ரீதியாக பெற்றிருக்கிறார். அந்த பணம் இன்றுவரை எங்கே என்பது தெரியவில்லை.

அதிபரின் வினைத்திறனற்ற செயற்பாட்டால் பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் இணைப்பதால் பாடசாலை மாணவர்களது எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 2015இல் 400 மாணவர்களாக இருந்த தொகை இவ்வருடம் (2022) 202 ஆக குறைவடைந்துள்ளது.

அதிபரின் ஊழல்களை தட்டிக்கேட்ட பெற்றோரின் பிள்ளைகள் வேறு பாடசாலை களுக்கு நாசூக்காக விரட்டப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் ஊழலை தட்டி கேட்கின்ற அல்லது தன் ஊழலுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்ற ஆசிரியர்களுக்கு வலயம் மூலம் இடமாற்றம் வழங்கப்பட்டமையே இப்பாடசா லையின் வரலாறாக காணப்படுகிறது.

அதிபரின் அடாவடித்தனமான அநாகரிமான செயற்பாடுகள் தொடர்பாக கோட்டக்கல்வி வலயக் கல்வி பணிமனையின் அதிகாரிகள் மட்டத்தில் தெரிந்திருந்தும் அதிபருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை இன்றுவரை எடுக்கப்படாமல் இருப்பது பாடசாலை சமூகத்துக்கும் கொட்டடி மக்களுக்கும் ஆழ்ந்த கவலையை தருவதாக உள்ளது.

2015இல் அதிபராக கடமையைப் பொறுப் பேற்ற இவர் 2019 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு அடைந்துள்ளார்.

அதன் பின்னரும் இவரை இப்பாடசாலையில் அதிபராகப் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டதன் பின்னணி என்ன?

ஊழலற்ற நாட்டை கட்டியெழுப்பும் இலக் குடன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தற்போதைய அரசிடம் சிறார்களின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்க பொருத்தமான தீர்வை நாம் எதிர்பார்த்து காத்திருக்கிறோம். எனவே விசாரணைக் குழுவை நியமித்து எமக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரும்படி தங்களைவேண்டி நிற்கிறோம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

### தனியார் கம்பனிக்குள்..

தேசிய மக்கள் சக்தி கட்சியின் எம்.பி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தொழிற்சாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதியை மாற்றுமாறு நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்ததாக அந்த நிறுவனத்தில் போக்குவரத்து வசதிகளை இப்போது மேற்கொண்டுவரும் குழு சுட்டிக்காட்டுவதுடன் மேற்படி எம்.பி தலைமையிலான குழு தொழிற்சாலை நிர்வாகத்திடம் இருந்து மிரட்டி பணம் வசூலிக்க வந்ததாகவும் சாடுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அரச நிறுவனங்களின் பிரச்சினை என்றால் தலையிடுவது பிரச்சினையல்ல என்றாலும் தனியார் நிறுவன போக்குவரத்து வசதி விவகாரத்தில் தலையிடுவது ஏற்றுக்கொள்ள முடியாததென மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொழிற்சாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும் தரப்பினர்,அங்கு வந்து எம்.பி உள்ளிட்டோரை தடுத்து நிறுத்தி கேள்வி எழுப்பியதால் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

தொழிற்சாலையில் போக்குவரத்து வசதிகள் செய்து தருவதில் தாமதம் ஏற்படுவதாக கிடைத்த புகாரின் பேரில் ஆலோசிக்க சென்றதாக எம்.பி தலைமையிலான குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் பிங்கிரிய தொகுதியின் அமைப்பாளர் விஜேசிறி பஸ்நாயக்க எம்.பி இவ்வாறு நடந்துகொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

### காடுகள் மாறினாலும்...

போர் இவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட் டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்கூட இதன் ஓர் அங்கம்தான்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால் மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று எவராலும் கூற முடியாது. எனவே, மஹிந்தவைப் பாதுகாக்க வேண்டியது எமது இனத்தின் கடப்பாடாகும்.

76 ஆண்டு கால சாபத்துக்கு முடிவுகட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக்கினார்கள். எனவே, அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மாளிகை பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி செய்கின்றனரா என்பது பற்றி பாதுகாப்புத் தரப்பினர் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது என்பார்கள்.

ஜனாதிபதி செயலக வீதிகளைத் திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது?" – என்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார்.

### மக்கள் குறைகளை...

வனவிலங்குகளின் அட்டகாசத்தை கட்டுப்ப டுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியதாக சாடி, அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்ய ஸ்ரீ ஹேரத்தின் அலுவலகத்தை கிராம மக்கள் முற்றுகையிட்டுள்ளனர். பொலிஸாரின் தலையீட்டால் பதற்ற நிலைமை அங்கு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

காட்டு யானைகளின் தொல்லையால் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் அதற்காக நட்டஈடு கோரியும் யானைகளிடமிருந்து பாதுகாப்பு கோரியும் நீண்ட காலம் வலியுறுத்தல்களை விடுத்தபோதும் அவை கணக்கிற் கொல்லப்படவில்லையென குற்றஞ்சாட்டுகின்றனர்.

திறப்பனே பிரதேச செயலாளர் அலுவலகம் முன்பாகவும் ஊர்மக்கள் முன்னதாக ஆர்ப்பாட் டம் செய்தனர். இதனையடுத்து மேற்படி எம்.பியின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. எவ்வாறாயினும் இந்த போராட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார், அறுவர் மட்டும் எம்.பியுடன் பேசுவதற்கு அனுமதி வழங்கினார்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள ஊர்மக்கள், தொடர் போராட்டங் களை நடத்தப் போவதாக எச்சரித்துள்ளனர்.

### ஊடகங்களுக்கு தணிக்கை...

ஊடகங்களுக்கு தணிக்கையை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்துக்கு இல்லை என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் ஊடக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சரிடம் முன்வைத்து பல கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடுமாறு ஒலிபரப்பாளர்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

ஊடகங்களும் அரசாங்கமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுகிறது.ஊடகங்கள் மீது தணிக்கை விதிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார் அமைச்சர் நளிந்த.

# புத்தாண்டை முன்னிட்டு காலிமுகத்திடலுக்கு வரும் வாகனங்கள்; விசேட போக்குவரத்து திட்டம்

2025ஆம் ஆண்டு புதுவருடத்தைக் கொண்டாடுவதற்காக பெருந்தொகையான மக்கள் வாகனங்களில் இன்று இரவு (31) காலிமுகத்திடல் வளாகத்துக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதன்படி, கொழும்பு நகரில் எதிர்பார்க்கப்படும் கடுமையான வாகன நெரிசலைக் குறைக்கும் வகையில், கொழும்பு கோட்டை, கொம்பனித் தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கறுவாத்தோட்டம் போன்ற பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட வீதிகளுக்கு இந்த விசேட போக்கு வரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.காலி மத்திய வீதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படாது என்றும், வாகனங்களை நிறுத்துவதற்கு வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** — பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக் குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**ரிஷபம்** — திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மிதுனம்** — கூட்டுத் தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. நீண்ட நாள் மனக்குறை தீரும்.

**கடகம்** — நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய்,கடன், எதிரி இவை எதுவுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

**சிம்மம்** — மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.

**கன்னி** — எதிர்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றைய நாளில் கூடாது.

**துலாம்** — நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**விருச்சிகம்** — குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்தி ஏற்படும். உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.

**தனுசு** — குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**மகரம்** — தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப்போனாலும் கிடைக்காது.

**கும்பம்** — தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி யடைவீர்கள்.

**மீனம்** — தொழில் மூலமாகப் பதவியுயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**திதி** : பிரதமை பி.இ.3.22 வரை பின் துவிதியை
**நட்சத்திரம்** : பூராடம் பி.இ.12.03 வரை பின் உத்திராடம்
**பிறை** : வளர்பிறை
**யோகம்** : அமிர்த யோகம் முழுவதும்
**வார சூலை** : வடக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்** : காலை- 8.22 – 9.22 மணி வரை. பகல்- 12.22 – 1.22 மணி வரை
மாலை- 4.52 – 6.52 மணி வரை.
**ராகு காலம்** : 3.52 – 4.48 மணி வரை
**எமகண்டம்** : 9.22 – 10.52 மணி வரை
**குளிகை** : 12.22 – 1.52 மணி வரை
**சந்திராஷ்டமம்** : இடப-மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.
(பின்னிரவு 6.01 வரை இடப ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 12.03 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**இன்று பின்னிரவு 12.03 மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 400 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### போக்குவரத்து விதியை மீறிய 8,000 பேருக்கு 24 மணி நேரத்தில் அபராதம்




மதுபோதையில் வாகனம் செலுத்திய 401 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மொத்தமாக போக்குவரத்து விதிமீறல்களுக்காக கடந்த 24 மணி நேரத்தில் 8 ஆயிரத்து 68 பேருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று (30) காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 413 பேருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், அதிவேகமாக வாகனம் ஓட்டியதற்காக 48 ஓட்டுநர்கள் மீதும், கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் வாகனம் ஓட்டியதற்காக 53பேர் மீதும் மற்றைய போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 1,350 பேர் மீதும் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும், உரிமம் தொடர்பான குற்றங்களுக்காக 865 ஓட்டுநர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மேலும் போக்குவரத்து விதிமீறல்களுக்காக 5,351 பேருக்கு அபராதமும் விதிக்கப்பட்டன.

# மஹிந்தவின் பேச்சாளராக ரவீந்திர மனோஜ் கமகே நியமிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ பேச்சாளராக சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் 20 டிசம்பர் 2024 முதல் நடைமுறைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு-07 இல் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இதற்கான நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டது.

# காணாமல்போன முதியவர் மன்னாரில் சடலமாக மீட்பு



*ஜோசப் நயன்*

மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் மிதந்து வந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று (30) காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய கூலித் தொழிலாளியென அவரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னார் சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ராசு என்ற குடும்பஸ்தர் கடந்த 28ஆம் திகதிமுதல் காணாமல் போயிருந்த நிலையில், அவரை குடும்ப உறவினர்கள் தேடி வந்தனர்.

இந்த நிலையில், கூலித்தொழிலாளியான குறித்த நபர் நேற்று (30) மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டார். மீனவர்கள் கடற்படையினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலத்தை மீட்ட கடற்படையினர் சௌத் பார் கடற்கரைக்கு கொண்டுசென்றனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆசைகாட்டி ரூ.11 இலட்சம் மோசடி

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி 11 இலட்சம் ரூபாவை மோசடி செய்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி இரு நபர்களிடமிருந்து 11 இலட்சம் ரூபாவை மோசடியான முறையில் பெற்றுள்ளதாகக் கூறப்படும் நபரொருவரை கிரிபத்கொடை பொலிஸார் கிரிபத்கொடை டயர் சந்தியில் வைத்து நேற்று முன்தினம் (29) கைதுசெய்துள்ளனர்.

இச்சந்தேக நபர் கிரிபத்கொடை - மாகொல வீதியிலுள்ள சபுமல் உயன பிரதேசத்திலுள்ள நபரொருவரிடமிருந்து ஆறு இலட்சம் ரூபாவும் களனி, நுங்கம்கொட பிரதேசத்திலுள்ள நபரொருவரிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபாவும் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறித்த சந்தேக நபருக்கெதிராக கொழும்பு கோட்டை மற்றும் களனி பொலிஸ் நிலையங்களில் பணமோசடி தொடர்பாக முறைப்பாடுகள் உள்ளதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் பாதுக்க, ஹொரகல கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கிரிபத்கொடை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தாரக விஜேசிங்க தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# ஊடகவியலாளரை தாக்கி கடத்த முயற்சி

### சந்தேக நபர்களுக்கு பிணை

கிளிநொச்சியில் ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வனை கடந்த 26ஆம் திகதி தாக்கி கடத்த முயற்சிசெய்த சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் நேற்று (30) ஆள் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப்பட்டபோது ஊடக வியலாளரால் இருவரும் சரியாக அடையாளம் காணப்பட் டனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், வழக்கு விசாரிக்கப்பட்டு இருவருக்கும் பிணை வழங்கப்பட்டதோடு, எதிர்வரும் மார்ச் மாதம் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை நியமிக்க விண்ணப்பம் கோரல்

2024ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பல்வேறு துறைகளில் நிரூபிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் கீர்த்தியுடன் பொதுவாழ்வில் மேன்மைமிக்கவர்களாக இருக்கும் நபர்களிடமிருந்து பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்படுவதற்கு அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

பாராளுமன்ற இணையதளத்தில் (www. parliament.lk) பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் நியமனம் எனும் துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ளதற்கமைய தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தகவல் படிவம் அ க்கு அமைவாகவும், பெயர்குறித்த நியமனங்கள் தகவல் படிவம் ஆ க்கு அமைவாகவும் தயாரிக்கப்பட வேண்டும்.

உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ பெயர் நியமனங்கள் 2025 ஜனவரி 20 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, எனும் முகவரிக்கோ அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பப்படல் வேண்டும்.

பெயர் குறித்த நியமனங்களின் விண்ணப்பப் படிவங்கள், பெயர் குறித்து நியமித்தவரால் பூர்த்திசெய்யப்படவேண்டுமென்பதோடு, பெயர் குறித்து நியமிக்கும் தரப்பினரால் அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலதிக தகவல்களை கீழே பின்வரும் இணைப்பில் பெற்றுக்கொள்ள முடியும். https://www.parliament.lk/ta/secretariat/advertisements/view/320



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 31ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஜிம்மி கார்ட்டர்!

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் மறைந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 100. அவரது மறைவுக்கு ஜனாதிபதி பைடன் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். கடந்த 2022 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர் ஜிம்மி கார்ட்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

1977 முதல் 1981 வரை ஜிம்மி கார்டர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாக இவர் பதவி வகித்தார். விவசாயப் பின்னணியைக் கொண்ட இவர் ஜோர்ஜியா மாகாணத்தைச் சேர்ந்தவர். அங்கு அவருக்குக் கிடைத்த மக்கள் அபிமானத்தால் ஜோர்ஜியா மாகாண ஆளுநர் தொடங்கி அமெரிக்க ஜனாதிபதி வரை உயர்ந்தார். கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி அவரது 100 ஆவது பிறந்தநாள் குடும்பத்தினர், நண்பர்களால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிலையில், அவர் வயது மூப்பு தொடர்பான உடல் நலக்குறைவால் உயிரிழந்தார்.

ஜிம்மி கார்டர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஜனாதிபதி ஜோ பைடன், “அமெரிக்காவின் இளம் தலைமுறையினரே, நீங்கள் அர்த்தமுள்ள வாழ்க்கை என்றால் என்னவென்ற தேடுதலில் இருந்தால், ஜிம்மி கார்ட்டரைப் படியுங்கள். அவர் நம்பிக்கையும் எளிமையும் கோட்பாடுகளும் நிறைந்த மனிதர்” - என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

சர்வதேச மோதல்களுக்கு அமைதியான தீர்வுகளைக் கண்டறிய பல தசாப்தங்களாகப் போராடியவர் ஜிம்மி கார்ட்டர். மனித உரிமைகளைப் பேண, பொருளாதார, சமூக வளர்ச்சியை மேம்படுத்த அவர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். அதனை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு கடந்த 2022ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இஸ்ரேல் மற்றும் எகிப்துக்கிடையே அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ளவும் அவர் முக்கிய பங்காற்றினார். அதேபோல, அவரது ஆட்சிக் காலத்தில் பல்வேறு சிக்கல்களையும் எதிர்கொண்டார். குறிப்பாக, ஈரானில் கடந்த 1980 ஆம் ஆண்டு பணயக்கைதிகளாக அமெரிக்கர்கள் பிடிபட்டதை மீட்பதில் தோல்வியடைந்தார். அதேபோல, எண்ணெய் நெருக்கடி விவகாரங்களைக் கையாள்வதில் மோசமாகச் செயற்பட்டதாக கார்ட்டருக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்தன.

பதவியிலிருந்த இரண்டாவது நாளில், கார்ட்டர் 4,483 பிரகடனங்களை வெளியிட்டு அனைத்து வியட்நாம் போர் வரைபு ஏய்ப்பாளர்களையும் மன்னித்தார். அவரது பதவிக்காலத்தில், இரண்டு புதிய அமைச்சரவை அளவிலான துறைகள்-எரிசக்தித்துறை மற்றும் கல்வித்துறை நிறுவப்பட்டன. பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய தேசிய எரிசக்திக் கொள்கையை அவர் உருவாக்கினார்.

கேம்ப் டேவிட் உடன்படிக்கைகள், பனாமா கால்வாய் ஒப்பந்தங்கள் மற்றும் இரண்டாம் சுற்று மூலோபாய ஆயுத வரம்பு பேச்சுகள் (SALT II) ஆகியவற்றை கார்ட்டர் பின்பற்றினார். பொருளாதார முன்னணியில் உயர் பணவீக்கம், அதிக வேலையின்மை மற்றும் மெதுவான வளர்ச்சி ஆகியவற்றின் தொடர்ச்சியான கலவையான தேக்கநிலையை அவர் எதிர்கொண்டார்.

அவரது ஜனாதிபதிப் பதவியின் முடிவு, 1979-1981 ஈரான் பணயக்கைதிகள் நெருக்கடி, 1979 ஆற்றல் நெருக்கடி, மூன்று மைல் தீவு அணுசக்தி விபத்து, நிகரகுவா புரட்சி மற்றும் ஆப்கானிஸ்தானின் சோவியத் படையெடுப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்டது.

படையெடுப்புக்கு விடையிறுக்கும் வகையில், கார்ட்டர் பனிப்போரைத் தீவிரப்படுத்தினார். சோவியத்துகளுக்கு எதிராக தானியத் தடையை விதித்தார், கார்ட்டர் கோட்பாட்டை அறிவித்தார் மற்றும் மொஸ்கோவில் 1980 கோடைகால ஒலிம்பிக் புறக்கணிப்புக்கு தலைமை தாங்கினார்.

அமெரிக்க உயர் நீதிமன்றத்துக்கு ஒரு நீதிபதியை நியமிக்காமல் முழு காலமும் பதவியிலிருந்த ஒரே ஜனாதிபதி அவர்தான். 1980 ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல்களில் அவர் செனட்டர் டெட் கென்னடியால் சவாலுக்கு உட்பட்டார். ஆனால், 1980 ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டார். கார்ட்டர் 1980 ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ரொனால்ட் ரீகனிடம் தேர்தலில் தோற்றார்.

வரலாற்றாசிரியர்கள் மற்றும் அரசியல் விஞ்ஞானிகளின் கருத்துக் கணிப்புகள் பொதுவாக கார்ட்டரை சராசரிக்கும் குறைவான ஜனாதிபதியாக மதிப்பிடுகின்றன. இருப்பினும், அவரது ஜனாதிபதிப் பதவிக்கு பிந்தைய நடவடிக்கைகள் அவரது ஜனாதிபதிப் பதவியை விட சாதகமாக பார்க்கப்படுகின்றன.

1982 ஆம் ஆண்டில் கார்ட்டர் மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு கார்ட்டர் மையத்தை நிறுவினார். 2002 ஆம் ஆண்டில் மையத்தின் இணை நிறுவுனர் பணிக்காக அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஜிம்மி கார்ட்டரின் மனிதாபிமானப் பணியைப் பாராட்டி உலகின் சிறந்த விருதான நோபல் பரிசு அவரது அமைதிக்கான பணிக்காக வழங்கப்பட்டது. அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் தேர்தல்களைக் கண்காணிக்கவும் வளரும் நாடுகளில் நோய்த் தடுப்பு மற்றும் ஒழிப்பை முன்னெடுத்துச் செல்லவும் விரிவாகப் பயணம் செய்துள்ளார்.

உலகில் நடக்கும் போர்களுக்கெல்லாம் ஏதோவொரு வகையில் காரணமாக அல்லது பின்புலத்திலிருக்கும் அமெரிக்காவின் ஜனாதிபதி ஒருவர் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார் என்பதே வரலாற்று ஆச்சரியம்தான். இஸ்ரேல் - எகிப்து போர் நிறுத்த உடன்படிக்கைக்காக ஜிம்மி கார்ட்டர் மேற்கொண்ட பணிகளுக்காக வரலாறு அவரைக் கௌரவித்தாலும் அப்படியான பணியை அதன்பின்னர் வந்த அமெரிக்க ஜனாதிபதிகளால் மேற்கொள்ள முடியாமல் போனமை சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

பலஸ்தீன், காஸா மீதான தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தபோது இஸ்ரேலுக்கு பயணமொன்றை மேற்கொண்டார் இப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன். அவரின் இந்த விஜயத்தையடுத்து மோதலை நிறுத்தி இஸ்ரேல் அமைதியைக் கையாளும் என்று உலகமே எதிர்பார்த்தபோதும் அதன்பின்னர் தான் காஸா மீதான இஸ்ரேலின் மனித சங்காரம் மிகமோசமாக நடைபெற்றது. ஜிம்மி கார்ட்டரை உதாரணமாகக் கொள்ளவேண்டுமெனக் கூறும் அதே பைடன், அமைதிக்கான நோபல் பரிசு ஜிம்மி பெற்றமைக்கான அடிப்படையைக் கூட மறந்திருப்பது பெருந்துயரம்.

உலக வரலாறில் ஜிம்மி கார்ட்டரின் தவறான இராஜதந்திரஅணுகுமுறைகள் பேசப்பட்டாலும் அவரின் நட்புறவும் சாணக்கியமுமே மேலோங்கி நிற்கின்றன. 100 வயதைத் தாண்டியும் அவர் வாழ்ந்திருக்கிறார் என்றால் மக்களுக்கான சேவையில் அவர் மனமகிழ்வுடன் இருந்திருக்கிறார் என்பதை யூகித்துக் கொள்ளலாம். ஒரு தலைவர் எப்படி இருக்கக்கூடாது என்பதை உலகுக்கு காட்டிய பைடனைப் போலல்லாமல், இப்படியல்லவா இருந்திருக்கவேண்டும் என்ற முன்னுதாரணத்தைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார் ஜிம்மி கார்ட்டர்.

# எட்கா: இலங்கையின் வளர்ச்சிக்கான நுழைவாயிலா இறையாண்மைக்கு அச்சுறுத்தலா?

**இம்தியாஸ் ஹசன்**



இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவின் அழைப்பின்பேரில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் நிதி பிரதி அமைச்சருமான அனில் பெர்னாண்டோ உள்ளிட்ட தூதுக்குழுவினர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த 15ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தனர். இவ்விஜயத்தை நிறைவுசெய்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பில் கடந்த 20 ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் செய்தியாளர்களைச் சந்தித்து இந்திய விஜயம் தொடர்பில் பல்வேறு கருத்துகளை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களின்போது, இரு தரப்புக்குமிடையில் இரு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவித்தார்.

அதில் முதலாவது புரிந்துணர்வு உடன்படிக்கையானது, எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு இரண்டு வார பயிற்சி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் 1,500 அரச உத்தியோகத்தர்களுக்கு இந்திய அரச சேவை பயிற்சி கற்கைநெறியொன்றை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையாகும்.

இரண்டாவது புரிந்துணர்வு உடன்படிக்கையானது, இரு நாடுகளுக்குமிடையில் இருக்கும் வரி முறைகளின் அடிப்படையில், இரட்டை வரியை நீக்கிக்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையாகும். இவற்றுக்கப்பால் வேறெந்த விடயங்கள் தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்றும் கூறினார்.

பிரதான பேசுபொருளாக மாறியிருக்கும் எட்கா ஒப்பந்தம் பற்றி வினவியபோது குறித்த எட்கா உடன்படிக்கை தொடர்பான கருத்து முன்வைப்புகள் நீண்டகாலம் இடம்பெற்று வருகின்றன. இந்த உடன்படிக்கையிலுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவே இணக்கம் தெரிவித்துள்ளோம். அதற்கப்பால் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு எந்தவொரு இடத்திலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எவ்வாறான ஒப்பந்தங்களிலும் ஒருபோதும் கைச்சாத்திடமாட்டோம் என்றும் அது எங்களின் பிரதான கொள்கையாகும் என்றும் கூறினார்.

இதிலிருந்து எட்கா ஒப்பந்தத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தானது என்ற கருத்து தற்போதைக்கு மறைந்திருப்பதை உணர்த்துகிறது. சரி விடயத்துக்கு வருவோம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மைய ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA) ஜனாதிபதி அநுரவின் இந்திய விஜயத்தின் பின்னர் தற்போது நாடு முழுவதும் பரவலான விவாதத்தைத் தூண்டியுள்ளது. சிலர் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கான ஒரு பொன்னான வாய்ப்பாக பார்க்கும்போது, பலர் இது உள்ளூர்த் தொழில்களை குறைமதிப்புக்கு உட்படுத்தும் மற்றும் வேலையின்மையை மோசமாக்கும் என்று கவலைப்படுகிறார்கள்.

ETCA இலங்கையின் பொருளாதாரத்தை மறுவடிவமைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. ஆனால், புத்திசாலித்தனமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நிர்வகிக்கப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும். பொதுமக்கள், ETCA எதைக் குறிக்கிறது என்பது பற்றியும் மற்றும் நம் வாழ்வில் அதன் சாத்தியமான தாக்கத்தைப் புரிந்துகொள்வது பற்றியும் தெளிவான அறிவைப் பெற்றிருப்பது முக்கியமாகும்.

### ETCA என்றால் என்ன?

ETCA என்பது 1998இல் கையொப்பமிடப்பட்ட இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (ISFTA) மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும். ISFTA பொருட்கள் வர்த்தகத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் அதேவேளையில், ETCAஆனது சேவைகள், முதலீடுகள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட பொருளாதார உறவுகளை விரிவுபடுத்தல் போன்றவற்றில் அதிக உச்ச பயனை அடைய முயல்கிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இலங்கை வர்த்தகர்கள் இந்திய சந்தைகளை மிக எளிதாக அணுக முடியும். அதேவேளை, இந்திய முதலீடுகள் உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இலங்கைக்குள் நுழைய முடியும். இது பரஸ்பர புரிதலாகும்.

### ETCA மூலம் இலங்கை அடையும் நன்மைகள் யாவை?

இந்தியாவின் பாரிய சந்தைக்கான அணுகல்.

1.429 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட இந்தியா, உலகின் மிகப்பெரிய நுகர்வோர் சந்தைகளில் ஒன்றாகும். இலங்கையைப் பொறுத்தவரை, இது ஏற்றுமதி வளர்ச்சிக்கான மகத்தான வாய்ப்புகளைத் திறக்கிறது. தேயிலை, இறப்பர், புடவை மற்றும் மீன்பிடி போன்ற தொழில்கள், குறைக்கப்பட்ட வர்த்தகத் தடைகளால் கணிசமாக பயனடைகின்றன. இந்திய சந்தைகளில் விரிவடைவதன் மூலம், இலங்கை வணிகங்கள் வருவாயை அதிகரிக்கவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் மற்றும் அவர்களின் உலகளாவிய போட்டித்தன்மையை வலுப்படுத்தவும் முடியும்.

### தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றம்

ETCA ஒப்பந்தமானது குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் மேம்பாட்டுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்தியா உலகளாவிய தகவல் தொழில்நுட்ப மையமாக இருப்பதால், இலங்கை வல்லுநர்கள் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து நிபுணத்துவம் பெறவும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அணுகவும் மற்றும் பாரியளவிலான திட்டங்களில் பங்கேற்கவும் வழி திறந்து கொடுக்கும். இது இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் திறன் மேம்பாடு மற்றும் புதுமைக்கு வழிவகுக்கும், நாட்டை ஒரு பிராந்திய தொழில்நுட்ப வீரராக நிலைநிறுத்தலாம்.

### வெளிநாட்டு முதலீடுகள்

இலங்கையில் இந்திய முதலீடுகள் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உற்பத்திக்கு மிகவும் தேவையான ஊக்கத்தை வழங்க முடியும். நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் தொழில் பூங்காக்கள் போன்ற திட்டங்கள் நாட்டின் பொருளாதார தளத்தை நவீனப்படுத்தும்போது ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். இந்திய நிறுவனங்களுடனான கூட்டு முயற்சிகள் அறிவைப் பகிர்வதை ஊக்குவிக்கலாம் மற்றும் இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தலாம்.

### தொழில்நுட்பப் பரிமாற்றம்

ETCA மூலம் மருந்துப் பொருட்கள், பொறியியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் பிற துறைகளில் இந்தியாவின் தொழில்நுட்ப முன்னேற்றங்களிலிருந்து இலங்கை பயனடையலாம். அறிவு மற்றும் தொழில்நுட்பத்தின் இந்தப் பரிமாற்றமானது உள்ளூர்த் தொழில்கள் மிகவும் திறமையாகவும் போட்டித்தன்மையுடனும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும்.

### ETCA பற்றி மக்கள் ஏன் கவலையடைகிறார்கள்?

அதன் சாத்தியமான பலன்கள் இருந்தபோதிலும் ETCA பல்வேறு தரப்பிலிருந்து குறிப்பாக, தொழில் வல்லுநர்கள், சிறு வணிகங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து விமர்சனங்களை ஈர்த்துள்ளது. அவற்றுள் சில முக்கிய கவலைகள் இங்கே:

### வேலைப் பாதுகாப்பின்மை

ETCAஐச் சுற்றியுள்ள மிகப்பெரிய அச்சங்களில் ஒன்று வேலை இழப்புக்கான சாத்தியமாகும். இந்திய தொழில் வல்லுநர்களை இலங்கையில் பணிபுரிய அனுமதிப்பது, குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் போட்டியை அதிகரிக்க வழிவகுக்கும் என்று பல இலங்கையர்கள் கவலைப்படுகிறார்கள். சரியான பாதுகாப்பு இல்லாதுபோனால், உள்ளூர்த் தொழிலாளர்கள் வேலை தேடுவதற்குப் போராடலாம் அல்லது ஊதிய ஒடுக்குமுறையை எதிர்கொள்ளலாம்.

### உள்ளூர்த் தொழில்களுக்கு அச்சுறுத்தல்

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs), ETCAஆல் மோசமாகப் பாதிக்கப்படலாம். பெரியளவிலான மற்றும் குறைந்த உற்பத்திச் செலவுகளைக்கொண்ட இந்திய நிறுவனங்கள், இலங்கைச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தக்கூடும். இது உள்ளூர் வணிகங்கள் மூடப்படுவதற்கும் வாழ்வாதாரங்களை இழப்பதற்கும் இறக்குமதிகள் அதிகரிப்பதற்கும் வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை அதிகப்படுத்துவதற்கும் வழிவகுக்கும். இந்தியாவின் பொருளாதார சார்பு நிலையானது ETCA இலங்கையை இந்தியாவை அதிகமாக நம்பி, வர்த்தகம் மற்றும் வெளியுறவுக் கொள்கையில் பேரம் பேசும் சக்தியைக் குறைக்கும் என்று சில விமர்சகர்கள் வாதிடுகின்றனர். இந்தச் சார்பு மற்ற நாடுகளுடன் அதன் பொருளாதார கூட்டாண்மைகளை பன்முகப்படுத்துவதற்கான இலங்கையின் திறனை மட்டுப்படுத்தலாம் என்றும் கருதுகின்றனர்.

### வெளிப்படைத்தன்மையில் சிக்கல்கள்

இவ்வொப்பந்தம் குறித்து இரு நாடுகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தை செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை இல்லாதது குறிப்பிடத்தக்க கவலையாக உள்ளது. ETCA பற்றிய பல விவரங்கள் பொதுமக்களுக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ கூட வெளியிடப்படவில்லை. இந்த உடன்படிக்கையானது சாதாரண இலங்கையர்களின் நலன்களை விட சக்திவாய்ந்த பங்குதாரர்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடும் என்ற அவநம்பிக்கை மற்றும் அச்சத்துக்கு வழிவகுத்துள்ளது.

### ETCA எவ்வாறு பொறுப்புடன் நிர்வகிக்கப்படுகிறது?

ETCA இலங்கையின் பொருளாதாரம் அல்லது பணியாளர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் பயனடைவதை உறுதிசெய்ய, அரசாங்கம் ஒரு சமநிலையான மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

இங்கே சில பரிந்துரைகள்:

***வலுவான பாதுகாப்பான பேச்சுவார்த்தைகளை நடத்துதல்:***

இந்த ஒப்பந்தத்தில் விவசாயம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்ற சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) போன்ற பாதிக்கப்படக்கூடிய துறைகளை நியாயமற்ற போட்டியிலிருந்து பாதுகாப்பதற்கான விதிகள் இருக்க வேண்டும். குறிப்பிட்ட தொழில்களில் வெளிநாட்டு நிபுணர்கள் வருவதற்கான கட்டுப்பாடுகள் உள்ளூர் வேலைகளைப் பாதுகாக்க உதவும்.

***உள்ளூர் தொழில்களுக்கு ஆதரவு வழங்குதல்:***

உள்ளூர் வணிகங்கள் இந்திய நிறுவனங்களுடன் போட்டியிட உதவும் வகையில் மானியங்கள், வரிச்சலுகைகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை அரசாங்கம் வழங்க வேண்டும். உள்நாட்டுத் தொழில்களில் புதுமை மற்றும் செயற்றிறனை ஊக்குவிப்பது அவசியம்.

***திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல்:***

போட்டித்தன்மையுடன் இருக்க இலங்கையின் பணியாளர்கள் மேம்பட்ட திறன்களைப் பெற வேண்டும். தொழிற்பயிற்சித் திட்டங்கள் மற்றும் இந்திய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு ஆகியவை திறன் இடைவெளியைக் குறைக்க உதவும்.

***வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்:***

பேச்சுவார்த்தை செயல்முறையானது தொழிற்றுறை பிரதிநிதிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்துப் பங்குதாரர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு பாராளுமன்றக் கண்காணிப்பு மற்றும் பொது ஆலோசனைகள் முக்கியமானவை.

***ஏற்றுமதி திறனை அதிகரித்தல்:***

விவசாயம், வாசனைத் திரவியங்கள், ஆடைகள் மற்றும் சுற்றுலா போன்ற இலங்கைக்குப் போட்டி நன்மைகள் உள்ள துறைகளை அரசாங்கம் கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும். ஏற்றுமதியாளர்களை ஆதரிக்கும் கொள்கைகள் இந்தியாவுடன் வர்த்தகத்தை சமநிலைப்படுத்த உதவும்.

### ETCA இன் சவால்கள்: நிவர்த்தி செய்வதற்கான அபாயங்கள்

***வேலைப் போட்டி ஒரு குறிப்பிடத்தக்க கவலை:***

ஏனென்றால், திறமையான இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையின் தொழில் சந்தையில் வெள்ளம்போல் படையெடுக்கக்கூடும். தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளிலுள்ள தொழில்கள் கடுமையான போட்டியை எதிர்கொள்ளக்கூடும். இது உள்ளூர்த் திறமைகளை இடமாற்றம் செய்து ஊதியத்தை அடக்கும்.

***உள்ளூர்த் தொழில்களுக்கு அச்சுறுத்தல்:***

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான SMEகள், குறைந்த உற்பத்திச் செலவுகளைக்கொண்ட பெரிய இந்திய நிறுவனங்களுக்கு எதிராகப் போராடக்கூடும். உதாரணமாக, மலிவான இறக்குமதிகள் சந்தையில் குவிந்தால் உள்ளூர் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும்.

***வெளிப்படைத்தன்மை சிக்கல்கள்:***

ETCA பேச்சுவார்த்தைகளின்போது பொது ஆலோசனை இல்லாதது எச்சரிக்கையை எழுப்பியுள்ளது. குடிமக்கள் மற்றும் தொழிற்றுறை பங்குதாரர்கள், ஒப்பந்தம் முழு இலங்கைக்கும் நன்மைகளை உறுதிசெய்வதற்கு அதிக வெளிப்படைத்தன்மையை கோருகின்றனர்.

***இந்தியாவின் மீது அதீத நம்பிக்கை:***

இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்துவது மதிப்புமிக்கது என்றாலும், அதிகப்படியான சார்பு சீனா, ஐரோப்பிய ஒன்றியம் அல்லது ஆசிய நாடுகள் போன்ற பிற நாடுகளுடன் வர்த்தக பங்காளித்துவத்தைப் பல்வகைப்படுத்துவதற்கான இலங்கையின் திறனை மட்டுப்படுத்தலாம்.

***சுற்றுச்சூழல் கவலைகள்:***

பெரியளவிலான உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் அதிகரித்த வர்த்தகம் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக, தொழிற்றுறை மண்டலங்களுக்கான காடழிப்பு. விரிவாக்கப்பட்ட போக்குவரத்து நெட்வேர்க்குகளால் ஏற்படும் மாசு போன்றவையாகும்

ETCAவின் வெற்றியோ தோல்வியோ சாதாரண இலங்கையர்களின் வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும். நன்கு நிர்வகிக்கப்பட்டால், ஒப்பந்தம் பல வேலைவாய்ப்புகளை உருவாக்கும், ஊதியத்தை மேம்படுத்தும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மிகவும் மலிவாக பெறக்கூடிய விதத்தில் மாற்றலாம்.

இருப்பினும், சரியான பாதுகாப்பு இல்லாவிடில், அது வேலை இழப்புகளை உருவாக்கும், அத்துடன், பொருளாதார உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும். குடிமக்கள் என்ற முறையில், தகவலறிந்து இருப்பது மற்றும் கொள்கை வகுப்பாளர்களை பொறுப்புக்கூற வைப்பது முக்கியம். முழுமையான ஆய்வு மற்றும் பொது உள்ளீடு இல்லாமல் ETCA அவசரப்படவோ அல்லது இறுதி செய்யப்படவோ கூடாது. இது வெறும் பொருளாதார உடன்படிக்கை மட்டுமல்ல - இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சக்தி வாய்ந்தது .

ETCA ஒரு முழுமையான ஆசீர்வாதமோ அல்லது உத்தரவாதமான பேரழிவோ அல்ல. இது ஒரு வலுவான, அதிக போட்டித்தன்மைகொண்ட இலங்கைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் பயன்படும் ஒரு கருவியாகும். ஆனால், கவனமாகச் செயற்படுத்தினால் மட்டுமே. தேசத்தின் நலனுக்காக அரசாங்கம் செயற்பட வேண்டும், வாய்ப்புகளைப் பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்த வேண்டும்.

ETCA உடன் தேர்ந்தெடுக்கும் பாதையானது, நாடு வலுவாகவும் வளமாகவும் வெளிப்படுகிறதா அல்லது பொருளாதார நிச்சயமற்ற நிலையைப் பாதிக்குமா என்பதை தீர்மானிக்கும். ஒரு தேசமாக, ETCA ஒரு முட்டுக்கட்டையாக இல்லாமல் முன்னேற்றத்துக்கான படிக்கல்லாக மாறுவதை உறுதிசெய்ய நாம் ஒன்றுபடல் வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1847 – ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- 1881 – இலங்கை முழுவதும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1984 – ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- 2011 – நாசா இரண்டு கிரெயில் செயற்கைக்கோள்களின் முதலாவதை நிலாவின் சுற்றுவட்டத்துள் செலுத்தியது.

## நக்கல் நமசிவாயம்

*அது செய்வோம் இது செய்வோம் என்டு ஆட்சிக்கு வந்தார்கள்.. நாளைக்கு பொங்கல் பொங்க ஒரு கிலோ பச்சரிசி இல்லைப்பாருங்கோ..!*



# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு ஐ.நாவிடம் நீதி கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்







வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ.நாவே நீதியைப் பெற்றுத்தா எனக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று (30) இடம்பெற்றது.

இதன்போது, ''காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே, இராணுவத்தினரின் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன, ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா, 15 வருடமாக போராடும் எமக்கு விடிவு இல்லையா'' என பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் தமது கைகளில் தாங்கியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. அமர்வில் எமக்கான நீதியைப் பெற்றுத் தர ஐ.நா வலியுறுத்த வேண்டும். 2025ஆம் ஆண்டிலாவது எமது 15 வருட போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# சப்ரகமுவ மாகாணத்துக்கு புதிய பிரதம செயலாளர் நியமனம்



**(இரத்தினபுரி நிருபர்)**

சப்ரகமுவ மாகாண புதிய பிரதம செயலாளராக ஈ.கே.ஏ.சுனிதா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சப்ரகமுவ மாகாண சபையின் 16ஆவது பிரதம செயலாளர் ஆவார்.

சப்ரகமுவ மாகாண சபையில் தமது கடமைகளை நேற்று (30) பொறுப்பேற்றார்.

சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளராக கடமையாற்றிய மஹிந்த எஸ்.வீரசூரிய ஓய்வுபெற்றுள்ளதையடுத்து சப்ரகமுவ மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக ஈ.கே.ஏ.சுனிதா ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் அண்மையில் (26) ஜனாதிபதி செயலக வளாகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

றுஹுணு பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை இரண்டாம் தர உயர் சித்தியுடன் முடித்துள்ளார். மேலும் களனிப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

1998 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த இவர் ஹெரேனாதொட்ட, கெனமல்பல, லுனுகம்வெஹெர, ஒகேவல, ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளராகவும் ஹம்பாந்தோட்டை, மொனராகலை மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராகவும் அம்பாறை, அம்பாந்தோட்டை மொனராகலை திவிநெகும பிராந்திய பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ள திருமதி ஈ.கே.ஏ.சுனிதா சப்ரகமுவ மாகாண சபையின் செயலாளராகவும் மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, சப்ரகமுவ மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களான சுஜீவ போதிமான்ன, சாமர பமுனுஆரச்சி, சஞ்சீவ கொடல்லவத்த, ஆளுநரின் செயலாளர் தர்ஷன சமரசேகர, பிரதி பிரதம செயலாளர் திலினி தர்மதாச மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி நிதிய அலுவலகம் இடமாற்றம்

**(எம்.ஏ.அமீனுல்லா)**

கொழும்பு - 10, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, லேக்ஹவுஸ் கட்டிடத்தின் 3ஆவது மாடியில் இதுவரை இயங்கிவந்த ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம் 2025 ஜனவரி 01ஆம் திகதி முதல் புதிய இடத்துக்கு இடமாற்றப்படவுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி நிதியத்தின் புதிய அலுவலக வளாகம் கொழும்பு - 01, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்துக்கு மாற்றப்படவுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் பொதுமக்கள், 2025 ஜனவரி 01 முதல், கொழும்பு - 01, ஜனாதிபதி மாவத்தை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலக வளாகத்துக்குச் சென்று சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.






*கொழும்பு - 11, செட்டியார் தெரு நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் ஆலயத்தின் அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரை குழு வழங்கும் மகரஜோதி மண்டல பூஜை நிகழ்வுகளில் படி பூஜை இடம்பெற்றது. இதற்கு பிரபு சாமி குடும்பத்தினர் உபயம் வழங்கினர்.*

# மாமூலைப் பகுதியில் மக்கள் குறைகேள் சந்திப்பை நடத்தினார் ரவிகரன் எம்.பி.




**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு - மாமூலைப் பகுதியில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்போது மாமூலைப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த மக்கள் குறைகேள் சந்திப்பில், மாமூலை கிராமத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அந்தவகையில், மாமூலைக் கிராமத்தில் வன வளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவித்தல், உள்ளக வீதிகளைச் சீரமைத்தல், கிராம அபிவிருத்திச் சங்க கட்டடச் சீரமைப்பு, விளையாட்டு மைதான மதில்சுவர் அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினரிடம் மக்களால் முன்வைக்கப்பட்டதுடன், கிராம மக்கள் சார்பாக குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பிலும் கிராமத்திலுள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் தொடர்பிலும் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென பாராளுமன்ற உறுப்பினரால் இதன்போது மக்களிடம் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மக்கள் சந்திப்பில் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் அசௌகரியம்

**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் வியாபாரிகள் விலைகளை அதிகரித்து விற்பனை செய்வதால் மக்கள் தமது அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

கடைகளிலும் சந்தைகளிலும் அரிசி, வெங்காயம், தேங்காய் எண்ணெய், தேங்காய் போன்ற பல பொருட்களின் விலைகள் எதிர்பார்த்த அளவு குறையவில்லை. இதேபோல் பழ வகைகளின் விலைகளும் குறையவில்லை.

பழுதான அல்லது நீண்டநாள் சென்ற பொருட்களின் விலைகளே குறைவாக காணப்படுகின்றது. சில வியாபாரிகள் சந்தைகளில் பழுதான பொருட்களை நல்லதுபோல் ஏமாற்றி விற்பனை செய்வதாலும் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது விடயத்தில் பாவனையாளர் அதிகாரசபை அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சீனன்கோட்டை கென் சர்வதேச ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா




**(பீ.எம்.முக்தார்)**

பேருவளை, சீனன்கோட்டை கென் சர்வதேச ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பேருவளை சீக்கு விழா ஹோட்டலில் நடைபெற்றது.

பாடசாலை பணிப்பாளர் முஹம்மத் இஹ்ஸான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறார்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நளீம் ரபீக் பிரதம அதிதியாகவும் ருஷ்கான் ஹிகம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

சீனன்கோட்டையில் பல வருட காலமாக இயங்கிவரும் கென் சர்வதேச ஆரம்ப பாடசாலை சிறார்களின் பல்வேறு மேடை நிகழ்ச்சிகளை அதிதிகள் உட்பட பலரும் பெரிதும் பாராட்டினர்.

# வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் நத்தார் நிகழ்வு





**(சிவகுமார் திவியா)**

வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் நத்தார் நிகழ்வு வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதான பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வமத பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்துகொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது நத்தார் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருட்களும் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

### 2025 உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல்

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2025 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும், அது தொடர்பான ஆலோசனை பத்திர அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

முன்மொழியப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் **2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி** வரை ஏற்றுக் கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்கும் அமர்வு **2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி** முதல் 09 மாகாணங்களிலும் நடைபெறும்.

பொதுமக்களின் ஆலோசனைக் கேட்டல் முடிந்த பின்னர் ஆணைக்குழு இறுதி முடிவை **2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்** 17 ஆம் திகதியன்று அறிவிக்கும்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**தபால் - "மின்சார கட்டணம் குறித்த பொது ஆலோசனை"**
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

**பெக்ஸ்:** 011 239 2641
**வட்ஸ்அப்:** 076 427 1030
**மின்னஞ்சல்:** info@pucsl.gov.lk
**இணையதளம்:** www.pucsl.gov.lk
முகநூல்: www.facebook.com/pucsl

**வாய்மொழிமூல அமர்வுகளில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்க பின்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்.**

| மாகாணம் | பொது ஆலோசனைக்கான கேட்பதற்கான இடம் | திகதி | பதிவுகளுக்கு |
|---|---|---|---|
| வடக்கு | மாவட்ட செயலக கேட்போர் கூடம், யாழ்ப்பாணம் | 2025 ஜனவரி 06 | 077 039 9119 |
| கிழக்கு | மாவட்ட செயலக கேட்போர் கூடம், மட்டக்களப்பு | 2025 ஜனவரி 08 | |

தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
31.12.2024

# 2024இல் அனர்த்தங்களால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு ஜன. 5க்குள் இழப்பீடு

## விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை அறிவிப்பு



வெள்ளம், வறட்சி மற்றும் காட்டு யானைகள் என்பவற்றால் சிறுபோக விவசாயச் செய்கைக்கு (2024) ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு ஜனவரி 05, 2025க்குள் முழுமையாக வழங்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கை பாதிப்புக்குள்ளாகின.

வறட்சி,வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காட்டு யானைகள் அட்டகாசம் என்பனவே இழப்புகளுக்கான முதன்மைக் காரணங்களாகுமென விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்றுவரை, இழப்பீடு கிட்டத்தட்ட ரூ. 80 மில்லியன் வழங்கப் பட்டுள்ளது என்று அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எஞ்சிய அனைத்து கொடுப்பன வுகளும் ஜனவரி 05ஆம் திகதிக்குள் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை உறுதிசெய்துள்ளது.

கூடுதலாக, 2024/2025 பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற் கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் அடுத்த மாத தொடக்கத்தில் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மின்சாரம் தாக்கி மூவர் உயிரிழப்பு!

## நுரைச்சோலையில் சோகம்

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் - நுரைச்சோலை, மாம்புரி பகுதியில் வீடு நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் நால்வர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியதில் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துயரச் சம்பவம் நேற்று முன்தினம் (29) ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.



புத்தளம் சோல்டன் மற்றும் மதீனா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு மின்சாரம் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 16, 22 மற்றும் 29 வயதுகளையுடையவர்களாவர்.

நுரைச்சோலை – மாம்புரி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் குறித்த கட்டடத்தில் இரும்பிலான பலாஞ்சு மீது ஏறி, வேலை செய்து கொண்டிருந்த போதே மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இதன்போது அங்கு 11 பேருக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. குறித்த வீட்டை நிர்மாணிப்பதற்காக அந்த வீட்டின் உரிமையாளர் தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கியதுடன், அந்த ஒப்பந்தக்காரர் பல தொழிலாளர்களை ஈடுபடுத்தி அந்த வீட்டின் வேலைகளை செய்துவந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற போது, இரும்பில் செய்யப்பட்ட பலாஞ்சு மீது மின்சாரம் பாய்ந்ததில் அங்கு கட்டட நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது மின்சாரம் தாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து, அந்த இளைஞனை காப்பாற்றும் நோக்கில் அங்கிருந்த மூவர் முயற்சி செய்தபோது நால்வருள் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் தூக்கி வீசப்பட்ட நிலையில் உயிர் பிழைத்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், மரண விசாரணைகளை முன்னெடுத்தார்.

மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த மூவரின் சடலங்களும் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரிஷாத்தின் முயற்சியில் 7 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் பாடசாலைக் கட்டிடம்



## நிர்மாணப் பணிகளை பார்வையிட நேரில் கள விஜயம்!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் முயற்சியில் புத்தளம், நாகவில்லு பிரதேசத்தின், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலத்தில், 07 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும், 3 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை கட்சியின் தலைவர் ரிஷாத் ஞாயிற்றுக்கிழமை (29) நேரில் சென்று பார்வையிட்டார்.



மேற்படி விஜயத்தின்போது, வகுப்பறைக் கட்டிட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய அவர், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ், பாடசாலைக்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்களையும் கல்லூரி நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில், மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான என்.ரீ.எம். தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான றிபாஸ், ரிஜாஜ் மற்றும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் நாசர், பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உட்பட கட்சியின் நாகாவில்லு கிளை முக்கியஸ்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# ரயில் மோதியதில் காட்டு யானை பலி



**(அநுராதபுரம் நிருபர்)**

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்றுகொண்டிருந்த கடுகதி ரயிலில் மோதி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளதாக மின்னேரிய தேசிய வனப் பூங்கா அதிகாரி தெரிவித்தார்.

கிழக்கு ரயில் வீதியின் ஹபரணை ரயில் நிலையத்துக்கும் கல்ஓய சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயிலில் மோதிய யானைக்கு சிகிச்சையளிப்பதற்காக சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்ட வன ஜீவராசிகள் திணைக்கள கால் நடை வைத்தியர்களினால் தீவிர சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் (29) அதிகாலை 2.30 மணியளவில் யானை உயிரிழந்தது.

# யால வனப்பகுதியில் கஞ்சா சேனைகள் முற்றுகை

**(கெலும் குணதிலக்க)**

யால வனப்பகுதிக்குட்பட்ட பன்விட ஆர பகுதியில் உள்ள இரண்டு பாரிய கஞ்சா சேனைகளை ஒக்கம்பிட்டிய பொலிஸார், புத்தல விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் குழுவுடன் இணைந்து நேற்று முன்தினம் (29) சுற்றிவளைத்தனர்.

இதன்போது மர்மநபர்கள் தப்பிச்சென்றதுடன், முதல் இரண்டரை ஏக்கர் கஞ்சா செடியில், எட்டு அடி உயரமுள்ள 80 ஆயிரம் கஞ்சா செடிகளும் மற்றுமொரு ஒன்றரை ஏக்கர் கஞ்சா சேனையில் 5 முதல் 6 அடி உயரமுள்ள 38 ஆயிரம் கஞ்சா செடிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

கஞ்சா சேனைகள் வெட்டி அழிக்கப்பட்டதுடன், சில கஞ்சா செடிகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்குத் தேறியது கட்சியிலிருந்து அவரது நீக்கமும் தேர்தல் கணக்கறிக்கை வழக்குமே

## அரசியல் அரங்கில் ஐங்கரநேசன் ஆதங்கம்!



**(பு.கஜிந்தன்)**

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சிலவும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து உருவாக்கிய தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருந்தது.

கோட்பாட்டு ரீதியாக இதனை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இவரது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தும் இருந்தது. அவர் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைத் திரட்டியிருந்தார்.

இது தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் கிடைத்த வெற்றியாகவே நோக்கப்பட்டது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் தேசமாகத் திரட்டப்பட்ட மக்கள் புதிய வழிகாட்டுதல் இல்லாததால் பிரிந்து நின்று தங்கள் விருப்பத்துக்கு வாக்களித்தார்கள்.

இந்நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேறிய விளைவாக கட்சியில் இருந்து அவர் நீக்கப்பட்டதும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் செலவழித்த கணக்கு விபரங்கள் தொடர்பான வழக்கும் மாத்திரமே எஞ்சியுள்ளன என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நேற்று முன்தினம் (29) ஆவாரங்கால் கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யுத்தத்துக்குப் பின்னர் தமிழ் அரசியலை நெறிப்படுத்த சிவில் அமைப்புகள் எனப்படும் குடிசார் அமைப்புகளின் வகிபாகம் இன்றியமையாததாக உணரப்பட்டது. இதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்று வெற்றிகரமாக எழுக தமிழ் பேரணிகளை நடத்திக் காட்டியிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்காகக் குறைந்தபட்சத் தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்திருந்தது. தமிழ் மக்கள் பேரவையின் மீது மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் தனியான ஒரு கட்சியை ஆரம்பித்ததுடன், அது குறை ஆயுளுடன் முடிவுக்கு வந்தது.

குடிசார் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபை மீதும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனால்தான் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் திரளாக வாக்களித்திருந்தார்கள்.

ஆனால், அந்த நம்பிக்கையும் இப்போது பொய்த்துப்போய்விட்டது. உரிய வழிவரைபடம் அதனிடம் இல்லாத காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து குறுகிய கால இடைவெளியில் வந்த பாராளுமன்றத் தேர்தலை அது எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கியது.

தமிழ்த் தேசிய உணர்வுடன் தன் பின்னால் திரண்ட மக்களுக்கு அது வழிகாட்டத் தவறியது. இதுவும் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி இன் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

மக்கள் சிவில் சமூக அமைப்புகளை நம்பமுடியாத ஒரு சூழ்நிலையை சிவில் அமைப்புகளே இன்று உருவாக்கிவிட்டன. அரசியலில் சிவில் அமைப்புகள் தங்களின் வகிபாகம் குறித்து மீள் பரிசீலனை செய்தாலொழிய அவற்றால் இன்னொரு கட்டத்துக்கு நகர முடியாது. சிவில் அமைப்புகள் சில கட்சிகளின் பினாமிகளாகவே உள்ளன.

சிவில் அமைப்புகளின் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி சிலர் தேர்தலில் குதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். கட்சி அரசியலை முன்னிறுத்தாத, தமிழ்த் தேசிய அரசியலை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஒரு மக்கள் இயக்கமாக சிவில் சமூகங்கள் மாற்றம் பெற்றாலொழிய தமிழ்த் தேசிய அரசியலை வருங்காலங்களில் அவற்றால் நெறிப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

## நாணய மாற்று விதம் (30.11.2024)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 177.8190 | 187.2516 |
| கனேடியன் டொலர் | 198.8027 | 207.5557 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.6907 | 41.2574 |
| யூரோ | 298.7874 | 311.3607 |
| ஜப்பான் யென் | 1.8201 | 1.8910 |
| சிங்கப்பூர் டொலர் | 210.5742 | 220.4725 |
| ஸ்ரேலிங் பவுண் | 361.1020 | 375.1097 |
| சுவிஸ் பிராங்க் | 316.7674 | 332.1889 |
| ஐ.அ. டொலர் | 288.3393 | 297.0686 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 775.8124 |
| குவைட் | குவைட் தினார் | 949.9718 |
| ஓமான் | ஓமான் றியால் | 760.3574 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.3053 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.9842 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.7062 |



கொழும்பு , முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹாவிஷ்ணு தேவஸ்தானம் மாணிக்க மணிகண்டன் புனித யாத்திரை நடத்திய மஹா மண்டல பூஜை சஞ்ஜீவ குமார் குருசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல சுவாமிமார்கள் , தொழிலதிபர்கள் மற்றும் பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். (படங்கள் : எம்.நசார்)



பலாங்கொடை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ சபரி யாத்திரைக் குழுவினரால் நடத்தப்பட்ட மகர ஜோதி மண்டல பெருவிழா கடந்த சனிக்கிழமை (28) இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கலந்துகொண்டதோடு, மண்டல பூஜை ஏற்பாட்டுக் குழுவினரால் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

# மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் பலி; மற்றொருவர் படுகாயம்

எம்.ஏ.அமீனுல்லா

கன்னொருவ பிரதேசத்தில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் உயிரிழந்த கந்தையா நிதாசன் ( வயது 24) புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவ்வாறு உயிரிழந்த நபரே மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் எனவும் பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞன் நண்பர்கள் குழுவுடன் வத்தேகம பிரதேசத்திலுள்ள பிரேத அறையிலிருந்து கடந்த 28ஆம் திகதி பிற்பகல் திரும்பிக் கொண்டிருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி ஆர். பி.ஜெயசுந்தர பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டார்.

# பாரவூர்தி குடை சாய்ந்ததில் ஐவர் வைத்தியசாலையில் அனுமதி



மஸ்கெலியா நிருபர்

பாரவூர்தி குடைசாய்ந்ததில் ஐவர் காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை (30) 11.35 மணியளவில் நல்லதண்ணி - மஸ்கெலியா பிரதான வீதி புரவுன்லோ தோட்ட முத்துமாரியம்மன் ஆலயப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. குறித்த பாரவூர்தி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

ராகலை பகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்யச் சென்று திரும்புகையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

பாரவூர்தியில் பயணித்த மூன்று சிறார்கள்,பெண்ணொருவர் உட்பட ஆணொருவர் காயமடைந்த நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

விபத்து குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி விசாரணை நடத்தி வருகின்றார்.

# நாடு முழுவதும் கைவரிசை; கலஹாவில் சிக்கியது திருட்டுக் கும்பல்!

## ஜனவரி 6 வரை விளக்கமறியல்

கலஹா செய்தியாளர்

நாடு முழுவதும் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று நகைக் கடைகள், ஆலயம், வீடுகள் உட்பட 27க்கும் மேற்பட்ட இடங்களில் பல கோடி ரூபா பணம், தங்க ஆபரணங்கள், கைத்தொலைபேசிகள் உட்பட விலையுயர்ந்த உடைமைகளை கொள்ளையிட்டு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுபேர் கொண்ட இளைஞர் குழுவொன்றை கலஹா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி குழுவினர் குறுகிய கால இடைவெளிக்குள் யாழ்ப்பாணம் பகுதியில் மூன்று திருட்டுகளும் வவுனியா, ஈச்சங்குளத்தில் நான்கு திருட்டுகளும் யாழ். பருத்தித்துறையில் மூன்று திருட்டுகளும் வவுனியா மாமடுவில் மூன்று திருட்டுகளும் கம்பளை, கலஹா பகுதியில் ஏழு திருட்டுகளும் நுவரெலியா, கந்தபொல பகுதியில் ஏழு திருட்டுகளும் மேற்கொண்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது

குறித்த சந்தேக நபர்கள் யாழ்ப்பாணப் பகுதி வீடுகளில் ஆயுதங்களைக் காட்டி மக்களை அச்சுறுத்தி மேற்கொண்ட கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாண பிரதேச நீதிமன்றங்களில் மாத்திரம் ஒன்பது பிடியாணைகள் உள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

19 முதல் 24 வயதுக்குட்பட்ட மேற்படி சந்தேக நபர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றங்களில் விடுக்கப்பட்ட பிடியாணைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் கடந்த நான்கு வருடங்களாக மாத்தளை, கந்தப்பொல மற்றும் கலஹா போன்ற பிரதேசங்களில் வாடகை வீடுகளில் தங்கியிருந்தே மேற்படி திருட்டுகளில் ஈடுபட்டு வந்தமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த குழுவைச் சேர்ந்த ஒருவர் கலஹா பிரதேசத்தில் நகைக்கடையொன்றில் வேலை செய்யும் போர்வையில் வேவு பார்த்து மூன்று நகைக்கடைகள், கோவில் மற்றும் பூசகரின் வீடு உட்பட 5 வீடுகள் உடைக்கப்பட்டு பணம் நகைகளையும் மருந்தகத்தில் பன்னிரெண்டு இலட்சம் ரூபா பணம் உட்பட உடைமைகள் பலவற்றையும் திருடியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடு களுக்கமைய கம்பளை பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் அசங்க பண்டார குணதிலக்க, கமல் ஆரியவன்ச, குணவர்தன, கலஹா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குணசேகர ஆகியோரின் ஆலோசனைக்கமைய கலஹா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சுகத் விஜேசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களால் திருடப்பட்ட கைப்பேசியின் ஊடாக யாப்பாணத்தில் மறைந்திருந்த இடத்தை அறிந்துகொண்டு அங்கு சென்று அவர்களை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை கடந்த வெள்ளிக்கிழமை (27) கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜபடுத்தியபோது ஜனவரி 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவுப் பிறப்பித்துள்ளார்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது

ராமு தனராஜா

கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை மீதும்பிட்டி பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 1,57,500 மில்லி லீற்றர் கோடாவும் 2,250 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இவர்கள் மீதும்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 36, 56 வயதுகளையுடையவர்களெனவும் தெரிவித்தனர்.

பசறை, மீதும்பிட்டி பகுதியில் குறித்த சந்தேக நபர்கள் கசிப்பு விற்பனையிலும் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருவதாக பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பியரட்ணவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின்பேரில் சில பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று சுற்றிவளைப்பை மேற்கொண்டபோது வீட்டினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு கைப்பற்றப்பட்டதாகவும் வீட்டின் பின்புறத்தில் கசிப்பு உற்பத்திக்காக பரலொன்றில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கோடாவும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்தனர்.

மேலும், சந்தேக நபர்களுக்கெதிராக பசறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள் ளதாகவும் மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை, குறித்த பகுதிகளில் பாரியளவில் கசிப்பு காணப்படுவதாகவும் விடுமுறை தினங்களில் மதுபானசாலைகள் மூடப்பட்டிருக்கும் வேளைகளில் வேறு பகுதிகளிலிருந்து கசிப்பு குடிப்பதற்காக அதிகளவில் நபர்கள் வருவதாகவும் இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மக்களை இழிவுபடுத்தவே இன்று பேஸ்புக் பயன்படுத்தப்படுகிறது

## ஊடகக் கற்கைகளுக்கான ஆலோசகர் பந்துல தயாரத்ன



எம்.ஏ.அமீனுல்லா

''நண்பர்களை அடையாளம் கண்டு, நட்பை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட முகநூல், இன்று வெறுப்புக்களை விதைக்கவும் குரோதங்களை பரப்புவதற்கும் மக்களை இழிவுபடுத்துவதற்கும் மற்றும் அவதூறு செய்வதற்கும் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது" என தேசிய கல்வி நிறுவகத்தின் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளுக்கான ஆலோசகரும் ஓய்வுபெற்ற கல்வியாளருமான பந்துல பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய மாகாண கல்வி அமைச்சும் மாகாண ஊடகப் பிரிவும் இணைந்து நடத்திய 'லொவக் தினன தருவோ' பாடசாலை ஊடகப் போட்டியின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு பல்லேகல மாகாணசபைக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே ஊடக அறிவை விரிவுபடுத்துதல் மற்றும் ஊடக அறிவை உருவாக்கும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் அவர்களை நவீன சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாறுபாடுகளை நோக்கிச் செலுத்துவதும் அதன் மூலம் அவர்களை ஊடகக் கலைக்கு வழிநடத்துவதும் ஆகும்.

மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளின் ஊடகக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியின் ஏழு திட்டப் பிரிவுகளின் கீழ் இங்கு விருதுகள் வழங்கப் பட்டன.

ஊடக திறன் மேம்பாட்டுப் பிரிவில் வத்தேகம-கெங்கல்ல மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ள, கேளிக்கை பிரிவில் கம்பளை-உலப்பனை மகா வித்தியாலயம் முதலிடத்தையும் சிறந்த பாடசாலை ஊடக கழக விருதை தேனுவர -ஹரமிட்டிகல ஸ்ரீ தீராநந்தா மகா வித்தியாலயம் அதிக புள்ளிகளுடன் பெற்றுக்கொண்டது.

மேலும் பி.தயாரத்ன தெரிவிக்கையில்,

தற்போது குறிப்பாக இணைய ஊடகங்களை கட்டுப்படுத்த முறையான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் நல்லதைச் செய்யும், நல்ல முறையில் வளரும் குழந்தைகளைக் கொண்ட குழுவை உருவாக்க வேண்டும். தேசிய கல்வி நிறுவனத்தின் திட்டமாக 1999 ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு ஊடகக் வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அப்போது ஊடக வலயத்திலிருந்த குழந்தைகள் இதை ஏன் பாடமாக கற்பிக்க முடியாது என்று கேட்ட மாணவர்களின் வேண்டுகோளின் விளைவாக, 2006 இல் பொது மட்டத்தில் ஒரு பாடமாகவும் 2008 ஆம் ஆண்டில் தொடர்பு மற்றும் ஊடக ஆய்வுகள் பாடத்தின் கீழும் சேர்க்கப்பட்டது.

வெளிப்படையாக, வெகுஜனத் தொடர்பாடல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகிறது வெகுஜன ஊடகங்கள் அல்ல. தொடர்பாடலுக்கும் ஊடக கற்றலுக்கும் உள்ள வித்தியாசம் புரியாமல் இன்னும் பல குழப்பங்கள் இருப்பதைக் காண முடிகிறது என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண அபிவிருத்தி செயலாளர் அஜித் பிரேமசிங்க, மத்திய மாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் மதுபானி பியசேன, விவசாய அமைச்சின் செயலாளர் சந்தன விக்கிரமசிங்க, மாகாண ஊடக அதிகாரி நிமல் சந்திரசிறி மஹவத்த மற்றும் மாகாண சபை அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# இ.தொ.கா. அனுஷாவின் 76ஆவது பிறந்தநாள் இன்று



மலையக மகளிர் இந்த நாட்டில் அனைத்துத் துறைகளிலும் பங்குபெறவேண்டுமென்பதே தொழிலாளர் கட்சிப் பிரதித் தலைவி திருமதி அனுஷியா சிவராஜாவின் இலட்சிய தாகமாக இருக்கிறது. இந்த இலட்சியத்தை ஈடேற்றுவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார். இதற்காகப் பல்வேறு அமைப்புகளில் பங்குவகித்து பணிகளை மேற்கொண்டும் வருகிறார்.

மலையகத்தில் பெருந்தோட்டங்கள் பரவலாக அமைந்திருக்கின்றன. அவற்றில் பெண்களின் பங்கு பணிகளே அதிகம். காலை முதல் மாலை வரை வெட்டவெளியான வேலைத்தலங்களில் தங்கள் உழைப்பை வழங்கி வருகின்றார்கள். அடைமழையிலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் இவர்களின் வேலை தங்குதடையின்றி ஓடும். இவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்பதே பிரதித் தலைவி அனுஷியாவின் ஆவலாய் இருக்கின்றது.

'கூடை தலைமேலே குடி வாழ்க்கை கானகத்தில்' மலையகப் பெண்களின் அர்ப்பணிப்பையும் அதேவேளை, அவலத்தையும் இந்தப் பாடல் வரிகள் சித்திரிக்கின்றன. மலையகத் தோட்டப் பெண்கள் நாள்முழுவதும் மலைகளில் ஏறி யிறங்கி பணிசெய்வதோடு அவர்களின் கடமை முடிந்துவிடுவதில்லை. மாலையில் வீடு திரும்பியதும் வீட்டு வேலைச் சுமையைத் தாங்க வேண்டும்.

இத்தகைய நிர்ப்பந்தமான நாளாந்த பணிகளால் தோட்டப்புறப் பெண்கள் வாழ்க்கையில் இயந்திரமயமான சுழற்சிக் குள்ளேயே சுழன்றுகொண்டிருக்கின்றார்கள். எனவே, வேலை நேரத்தில் அவர்களுக்கு நியாயபூர்வமான வரையறை தேவை. இந்த மாதர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத் துவதற்கு சமூக, சமய, கலை, கலாசாரம் ஆகிய துறைகளில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். இதற்கான சமூக, ஆன்மீக, கலாசார அமைப்புகள் தோட்டவாரியாக இயங்கவேண்டுமென்பதே பிரதித் தலைவியின் நீண்டகாலக் கனவாகும்.

இந்த இலட்சியக் கனவை நனவாக்கு வதற்காகவே பிரதித் தலைவி முழுமையாகத் தனது பணியை தங்குதடையின்றிச் செய்து வருகின்றார். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் உருவாக்கப்பட்ட இ.தொ.காவின் கல்வி நிறுவனத்தில் பங்குபற்றிய தமது இலட்சியக் கனவுகளை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்பட்டு வந்துள்ளார். 1970களில் சமூக மட்டத்தில் இவரது சேவைகள் முக்கிய இடங்களை வகித்தன. சேவையால் இவரது பெயர் ஓங்கியது. இவரது பரந்து விரிந்த தொண்டால் பல்வேறு வாய்ப்புகள் இவரைத் தேடிவந்தன.

மலையக மகளிரும் பிற சமூக மகளிருக்கு சமமாகச் சிந்திக்கவும் - செயற்படவும் - வாழவும் வேண்டுமென்பதற்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான். குறிப்பாக, மகளிருக்கு 52 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கி இ.தொ.காவின் பல்வேறு பிரிவுகளிலும் அவர்களைப் பங்களிப்புச் செய்ய வைத்தவர் அவர். தலைமைப்பயிற்சி, மகளிர் முகாமைத்துவம், சமூக உணர்வு, அரசியல் பாசறை, தொழிற்சங்கப் பணியென்று மலையக மகளிரை பன்முகத் தன்மை கொண்டவர்களாக மாற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார். அதன் பலனாக எமது ஸ்தாபனத்தில் முக்கிய பொறுப்புகளை மலையக மகளிர் மிகச் சாதுரியமாகச் செய்து வருகின்றார்கள். இப் பணிகள் யாவற்றுக்கும் பக்கபலமாக அமைந்தவர் பிரதித் தலைவி என்பது கவனிக்கத்தக்கது.

மலையகத்தில் மூத்த முன்னோடித் தலைவர்களுள்ஒருவரான அண்ணாமலையின் புதல்வியே பிரதித் தலைவி அனுஷியா. இவரது தந்தை இ.தொ.காவில் ஆரம்பம் முதல் அமரர் தொண்டமானோடு இணைந்து கட்சியைக் கட்டிக்காத்து வந்தவராவார்.

சோதனைகளையும் மனோரீதியான வேதனைகளையும் இ.தொ.காவினர் சந்தித்த போதெல்லாம் இடர் களைந்து உற்சாகமூட்டி ஊக்கப்படுத்தி வந்தவர் அமரர் அண்ணாமலை. இவருடைய அஞ்சா நெஞ்சத்தால் 'அணுகுண்டு அண்ணாமலை', 'வீரமிகு சிங்கம்' என்ற அடைமொழிப் பெயர்கள் இவருக்கு வாய்த்தன. இவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

பிரதித் தலைவியான திருமதி அனுஷியா சிவராஜா தொழிற்சங்கத்துறையில் பல்வேறு மட்டங்களிலும் அங்கம்வகித்து மத்திய மாகாண சபை உறுப்பினராக, மாகாணக் கல்வியமைச்சராக, இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளராக, பின்னர் பொதுச் செயலாளராகவும் இன்று பிரதித் தலைவியாகவும் பல பொறுப்புகளை வகித்தமை நல்ல உதாரணம்.

பெண்களில் பலர் தோட்டக் கமிட்டித் தலைவிகளாகவும் மாதர் சங்கத் தலைவி களாகவும் இருந்துவருகிறார்கள். இப்பெண் உறுப்பினர்கள் பலர் தேயிலை மலை மேற்பார்வையாளர்களாகவும் (சுப்பவைசர்) கங்காணிகளாகவும் உதவித் தோட்ட அதிகாரிகளாகவும் அமையப்பெற்றிருக் கின்றார்கள். மாகாண சபைகளிலும் பிரதேச சபைகளிலும் நகர சபைகளிலும் இந்தப் பெண்களுக்குப் போதுமான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையில், எமது தமிழ்ப் பெண்கள் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது 27 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பது வரலாற்றுப் பெருமையே. எமது கிளைப் பணிமனைகளில் பிரதிநிதிகளாகவும் உதவி மாவட்டப் பிரதிநிதிகளாகவும் பலர் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் எம்மில் உப தலைவர்களாகவும் இருப்பது பெருமை தரக்கூடிய விடயமாகும். இந்த வகையில், பிரதித் தலைவியின் சிறப்பான செயற்பாடுகளில் இப்பணி முதன்மை பெறுகின்றது.

இவரது கணவர் சிவராஜா மிகுந்த சமூகப் பற்றாளர். நுவரெலியா மாநகர சபையில் பிரதி மேயராகப் பணியாற்றி, நகரத்தையும் நகர மக்களையும் மேம்படுத்த அளப்பெரும் சேவைகளையும் ஆற்றி வந்துள்ளார். இந்தக் குடும்ப பாரம்பரியங்களும் தாம் பெற்ற அனுபவங்களையும் தக்க வகையில் பயன்படுத்தி மலையக சமூகத்துக்கு ஆக்கபூர்வ பணிகளை ஊக்கத்துடன் மேற்கொண்டிருப்பதால் பிரதித் தலைவி அனுஷியா அம்மையார் பாராட்டைப் பெறுகின்றார்.

இன்று இவரது பிறந்தநாளில் நாமும் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

# சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள் எடுத்துச்சென்றால் கடும் சட்ட நடவடிக்கை

## யாத்திரிகர்களுக்குப் பொலிஸார் எச்சரிக்கை

ஜே.எம்.ஹாபீஸ்

சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தில் மதுப் பாவனை மற்றும் போதைப்பொருட்களை எடுத்துச் செல்லல் போன்றவற்றுக்குக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பொலிஸார் நேற்று முன்தினம் (29) தெரிவித்தனர்.

இதன்படி மதுபானங்கள், புகையிலை அடங்கிய போதைப்பொருள், ஹெரோயின் போதைப் பொருட்கள் போன்றவற்றை தமது பொதிகளில் வைத்திருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர். அத்துடன், சிவனொளிபாதமலைப் பிரதேச வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்தல் முற்றிலும் சட்டவிரோதமானது என்றும் கூறினர். சிவனொளிபாதமலை அடிவாரம் முதல் மலை உச்சி வரையிலுள்ள சகல இடங்களிலும் இவற்றை வைத்திருப்பது சட்டவிரோதமானது என்றும் போதைப்பொருள், தடுப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.



கந்தப்பளை பார்க் தோட்ட இந்து கலாசார மன்றத்தின் தலைமையில் நவராத்திரி விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கலாசார மன்றத்தினரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மன்ற அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், புதிய உறுப்பினர்களை உள்வாங்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ.ரமேஸ்)

# தமிழன் சுமந்த 2024இன் நினைவுப் பதிவுகள்...

அரசியலில் திருப்பங்கள்! 01.01.2024

மக்கள் திணறல்! 02.01.2024

ஜப்பானை உலுக்கிய 7.6 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 02.01.2024

ஜப்பானில் விமான விபத்து 379 பயணிகள் அருந்தப்பு 03.01.2024

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வரி பதிவிலக்கத்தை பெறவேண்டும் 03.01.2024

மொட்டு எம்.பி. விரட்டியடிப்பு! 03.01.2024

எல்-1 புள்ளியை தொட்ட ஆதித்யா 08.01.2024

இலங்கை வந்தார் இங்கிலாந்து இளவரசி 11.01.2024

இல்லாமிய நாடுகள் கடும் அதிருப்தி! 12.01.2024

ரணில் - தம்மிக்கவால் மொட்டுக்குள் பிளவு! 15.01.2024

அரசியலமைப்புச் சபை பக்கச் சார்பானது! 16.01.2024

சர்ச்சையை ஏற்படுத்திய 16.01.2024

நோயாளர்கள் பெரும் அவதி! 17.01.2024

தமிழரசின் தலைவரானார் சிறீதரன் எம்.பி. 22.01.2024

ஐவர் பலி 23.01.2024

பலி 26.01.2024

தேர்தலில் நான் போட்டியிடுவேன்! 12.02.2024

அட்டுலுகம சிறுமி கொலையாளிக்கு 27 வருட சிறை 14.02.2024

ஒரு நாடு: 15.02.2024

தைவான் 02.02.2024

கோருகிறார் டயனா! 22.02.2024

இராஜினாமா

உறவில் விரிசல்! 26.02.2024

கைது! 04.02.2024

20வீதத்தால் குறைக்குக! 27.02.2024

பொலிஸ் 05.02.2024

தமிழ் மொழியிலும் பாடப்பட்ட தேசிய கீதம் 05.02.2024

தேர்தல்கள் நடைபெற்றால் நடக்கும்! 06.02.2024

தனி நாடு! 29.02.2024

தமிழக அரசிடம் நீதிமன்றம் கேள்வி! 01.03.2024

சாந்தனின் உடல் இலங்கை வந்தது 03.03.2024

அவசர திருத்தம்! 04.03.2024

சாந்தனின் புகழுடல் நல்லடக்கம் 05.03.2024

மியன்மாரில் சிறைப்பிடிக்கப்பட்ட இலங்கையர் எண்மர் மீட்பு 05.03.2024

கட்சித் தலைவர்கள் கடும் அதிருப்தி! 06.03.2024

அரசாங்கத்தின் பயணப் பாதை வெற்றிகரமானது! 07.03.2024

சாணக்கியன் மீது தாக்குதல் முயற்சி! 08.03.2024

நல்லூரில் போராட்டம்! 11.03.2024

காட்டுச் சட்டம் நாட்டில் அமுல்! 28.02.2024

உத்திக எம்.பி. இராஜினாமா 28.02.2024

இலங்கையில் இறுவத் தளம்! 14.03.2024

'கோட்டா வெளியேற நானும் உதவினேன்' 14.03.2024

ரணில்-மொட்டு உறவில் முறிவு! 18.03.2024

5ஆவது முறையாகவும் ஆட்சிபீடமேறும் புட்டின்

ரணில் - அநுர உட்பட்டோர் விடுவிப்பு!

கைதானோர் விடுதலை! 20.03.2024

தமிழ் எம்.பிக்களின் போராட்டத்தால்

இந்தியாவே பின்னணி! 27.03.2024

மன்னார் காற்றாலை திட்டத்தால் பேரழிவு 21.03.2024

சபாநாயகரின் தலை தப்பியது! 22.03.2024

30 நாட்களுக்குள் சம்பள உயர்வு! 22.03.2024

மைத்திரிக்கு சிக்கல்! 23.03.2024

சி.ஐ.டியின் அழைப்பை ஏற்றார் மைத்திரிபால 24.03.2024

மைத்திரிபால சி.ஐ.டியில் 06 மணிநேர வாக்குமூலம் 25.03.2024

இலங்கை நோக்கி வந்த சரக்குக் கப்பல் மோதி இடிந்து விழுந்தது 'பிரான்சிஸ் ஸ்கொட்' பாலம் 26.03.2024

30,000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் யாசகத்தில் 28.03.2024

கடூழியச் சிறை! 29.03.2024

கச்சதீவால் களேபரம்! 02.04.2024

விமான நிலையத்தில் நீண்ட விசாரணை! 04.04.2024

மைத்ரிக்கு கட்டாணை! 05.04.2024

தொடர்ந்தும் நீடிப்பு! 09.04.2024

ஈரான் ஜனாதிபதி இலங்கை வருகை 17.04.2024

679 வாகனங்களையும் காணோம்! 17.04.2024

கார் விபத்தில் ஏழுவர் பலி! 22.04.2024

ஈரான் ஜனாதிபதிக்கு உத்தக்கட்ட பாதுகாப்பு 24.04.2024

நிதி அமைச்சருக்கே இடைக்காலத் தடை! 25.04.2024

3 மாத விடுமுறை 26.04.2024

நீதியரசர்களை நியமிக்க ஜனாதிபதிக்கு கட்டுப்பாடு! 01.05.2024

தின வேதனம் 1,700 ரூபா! 02.05.2024

மனித எச்சங்கள்! 03.05.2024

நீதிமன்றத்தால் தடுத்துவைப்பு! 08.05.2024

பதவி பறிபோனது 09.05.2024

போராடிய விசாரணை! 10.06.2024

சேவை நீடிப்பு! 19.06.2024

பிரான்ஸ் தூதுவர் திடீர் உயிரிழப்பு 27.05.2024

சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு! 02.06.2024

கம்பனிகளின் கோரிக்கையை கடாசியது நீதிமன்றம்! 03.06.2024

சிறிசேனவின் இரத்து! 07.06.2024

06 வருடங்கள் என்பதை நீதிமன்று நிராகரிப்பு

ஒருவருக்கு நிவாரணம் 16.08.2024

கிரிக்கெட் வீரர் சுட்டுக்கொலை 16.07.2024

தனிவழி செல்கிறோம்: கோமிக்கவே வேட்பாளர்! 23.06.2024

17 ஆண்டுகளின் பின் மீண்டும் ரி20 உலகக்கிண்ணம் இந்திய வசம் 01.07.2024

சம்பந்தன் காலமானார்! 02.07.2024

வெற்றிகரமாக நீக்கம் 05.07.2024

ஜனாதிபதித் தேர்தல் எதிர்மனு தள்ளுபடி! 16.07.2024

1983 ஜூலை கலவரம் 21.07.2024

விக்கிரமபாகு காலமானார் 26.07.2024

ஜனாதிபதி பதவிக்கு 39 பேர் போட்டி! 16.08.2024

ஹரீஸ் எம்.பி. இடைநிறுத்தம் 21.08.2024

ரயில் பயணிகளுக்கு e-ticket அறிமுகம் 25.08.2024

ஜோன்ஸ்டனுக்கு பயணத்தடை 30.08.2024

இலங்கையில் பாரதூரம்! 10.09.2024

அநுர வெற்றி! 23.09.2024

நான் மாயாஜால மந்திரவாதியல்ல! 24.09.2024

முதலாவது அமைச்சரவை 

இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்! 03.10.2024

பதவியை துறந்தார் மாவை சேனாதி 08.10.2024

கப்ராலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை 11.10.2024

தவறிழைத்த பாரதம்! 21.10.2024

லொஹானின் கைது! 01.11.2024

ட்ரம்ப் வெற்றி! 07.11.2024

அநுர அலை! 17.11.2024

புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு 18.11.2024

அனைவரையும் கைது செய்க! 06.12.2024

சபாநாயகர் இராஜினாமா! 15.12.2024

ஜனாதிபதி அநுர இந்தியா விஜயம் 16.12.2024

புதிய சபாநாயகராக ஜகத் நியமனம் 18.12.2024

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு வரையறை

நிறைவேற்று அதிகார முறைமை இரத்து! 30.12.2024

தென்கொரிய விமான விபத்து! 179 பேர் உயிரிழப்பு

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார்

# மட்டக்களப்பில் நீண்டகாலமாக காணப்படும் எல்லைப் பிரச்சினையை உடனடியாக தீர்க்குக!

## மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை



(சீலாமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை (30) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இதனை கருத்திற்கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் உடனடியாக விசேட குழுவொன்றை அமைக்க இணக்கம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மிக நீண்டகால மக்கள் குடியிருப்புக் காணிகளை அரச காணிகளாக அண்மையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தால் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் பிரதேச காணிகளை மீண்டும் அந்தந்த மக்களுக்கான தனியார் காணிகளாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை குறித்த குழு ஊடாக மேற்கொள்ள வேண்டுமெனவும் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை விடுத்ததுடன் அந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உட்பட திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளுக்கான நட்டஈடு குறித்து மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் ஆராய்வு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இவ்வாண்டுக்கான இறுதிக்கூட்டம் நேற்று திங்கட்கிழமை (30) அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரனின் ஒழுங்கமைப்பில் பழைய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அந்தவகையில், புதிய அரசாங்கத்தின் முதலாவது மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமானது அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்டஈடு சம்பந்தமாகவும் பசளை வழங்குதல், டெங்கு கட்டுப்பாடு, சுகாதாரம், கல்வி, மீன்பிடி, போக்குவரத்து, எதிர்காலத்தில் வெள்ள பாதிப்புகளைத் தடுத்தல் சம்பந்தமாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தின்போது மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உயரதிகாரிகள், விவசாயப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிபெற்று அம்பாறையில் மு.காவின் பலத்தை நிரூபிக்க வேண்டும்

## உதுமாலெப்பை எம்.பி. தெரிவிப்பு



(திகாமடுல்ல செய்தியாளர்)

''விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான திருத்தச்சட்டமூலம் அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துமாறு உயர்நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்றவுடன் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தி 159 ஆசனங்களைப் பெற்றுள்ளார். விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தி பெரும்பாவான உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிபெற்று கட்சியின் பலத்தை நிரூபிக்க வேண்டும்'' - என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவான ஐவருக்கான கௌரவிப்பு தொடர்பான ஆராயும் விசேட கூட்டம் அட்டாளைச்சேனை மத்திய குழுத் தலைவர் எஸ்.எல்.ஹலீம் தலைமையில் BEACH HOUSE மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய அவர்,

''மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய காலத்திலிருந்து அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் நடைபெற்ற அனைத்து பொதுத் தேர்தல்களிலும் கட்சிக்குப் பெரும்பான்மையான ஆதரவு வழங்கி வந்தனர். இதனால்தான் நடந்துமுடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை பிரதேசத்திலிருந்து இறைவனின் உதவியால் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 16 பிரதேசங்களிலிருந்து எமது கட்சியின் சின்னமான மரம் சின்னத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகளே காரணம்.

நடைபெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட எமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமையும் கிழக்கு மாகாணத்தில் எமது கட்சியை தோற்கடிப்பதற்கு கட்சிக்குள்ளிருந்தும் கட்சிக்கு வெளியிலிருந்தும் சதிகள் இடம்பெற்றன. இச்சதிகளைத் தாண்டி இறைவனின் அருளால் 05 பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. கட்சிக்குள்ளிருந்துகொண்டு கட்சித் தலைமையையும் கட்சியையும் தோற்கடிப்பதற்கு சதி செய்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கட்சி மேற்கொண்டு வருகின்றது.

கடந்த காலங்களில் எமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கும் தலைமைக்கும் வாக்களித்த மக்களுக்கும் விசுவாசமாக செயற்படாத காரணத்தால் பல சவால்களை எதிர்நோக்கினர். இந்த நிலைமை மாறி கட்சிக்கும் தலைமைக்கும் மக்களுக்கும் விசுவாசமாக 05 பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட்டு வருவது கட்சியின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது'' - என்றார்.

### சமூக வலைத்தளத்தில் அரச சேவைக்கு அவதூறு

# கிராம உத்தியோகத்தர் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை செவ்வியாக வழங்கியமையை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம்







(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பூலாக்காடு கிராம உத்தியோகத்தரை சமூக வலைத்தளமொன்றில் அரச சேவைக்கும் தன்மானத்துக்கும் அவதூறு விளைவிக்கும் வகையில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை செவ்வியாக வழங்கியமையைக் கண்டித்தும் கிராமசேவகருக்கு ஆதரவு தெரிவித்தும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று திங்கட்கிழமை (30) கிரான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

இப்போராட்டத்தில் பூலாக்காடு, பெரியவேரம், வட்டிபோட்ட மடு, அம்புஸ்குடா, ஆனசுட்ட பொத்தானை மற்றும் பொண்டுகள்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பங்குபற்றியிருந்தனர்.

கிரான் புலிபாய்ந்த கல் வீதியில் ஒன்றுகூடியவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக பிரதேச செயலக முன்வாயிலை சென்றடைந்தனர்.

இதன்போது, ''தூண்டாதே தூண்டாதே வன்முறையைத் தூண்டாதே, சமூகவலைத்தளமே நீதி வேண்டும் நீதி வேண்டும், கிராமசேவகருக்கு நீதி வேண்டும், நிறுத்துங்கள் நிறுத்துங்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதை நிறுத்துங்கள், பொய்யான தகவல்களை வெளியிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்து'' போன்ற கோஷங்களை இதன்போது எழுப்பினார்கள்.


பின்னர் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜரை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் 03 கிராமங்களைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள் கையளித்தனர். கோரிக்கை அடங்கிய மகஜரைப் பெற்றுக்கொண்டவர் உரிய நடவடிக்கைக்காக பிரதேச செயலரிடம் கையளிப்பதாக இதன்போது தெரிவித்தார்.

எங்களது கிராமத்தில் இயங்கும் மாதர் சங்கப் பிரதிநிதிகள் பல வருட காலமாக இவ்வமைப்பில் இயங்கி வருகின்றனர். இவர்கள் கிராம சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரை தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்குரிய பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அரச சொத்துகளைத் தாங்கள் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன், சில நாட்களாக கிராம உத்தியோகத்தரை அவமானப்படுத்தும் விதமான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை விசாரணைக்குட்படுத்துவதோடு இவர்களிடமுள்ள அரச சொத்துகளைப் பறிமுதல் செய்து புதிய மாதர் சங்கத்தை அமைத்து தருவதுடன், எமது கிராமசேவகர் எவ்வித இலஞ்சம் ஊழலும் புரியாதவர். எமது கிராமத்தில் சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்களை எவ்வித இடையூறுமின்றி அச்சுறுத்தலின்றி கடமையாற்ற வழிவகுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யூரியூப் வலைத்தள நபரொருவர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று மாதர் சங்க உறுப்பினர்களை செவ்வி கண்டு அங்கு கடைமையாற்றும் கிராமசேவகருக்கு எதிரான பல கருத்துகளை வெளியிட்டிருந்தார். இச்செயலானது பிரதேசத்தில் அமைதியின்மை யையும் அசாதாரண சூழ்நிலையையும் ஏற்படுத்தியிருந்தது. அத்துடன், அங்கு கடமையாற்றும் கிராமசேவகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடமை நிமித்தம் சென்ற கிராம உத்தியோகத்தரை தாக்கியோரை கைதுசெய்யக் கோரி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(கனகராசா சரவணன்)

வாழைச்சேனைக்கு கடமை நிமித்தம் சென்ற கிராம உத்தியோகத்தரொருவரை தாக்கியவர்களை கைதுசெய்யக் கோரியும் சட்டத்தை அமுல்படுத்தாத பொலிஸாருக்கு எதிராகவும் நேற்று திங்கட்கிழமை (30) கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறையுடன் கவனயீர்ப்புப் பேரணியொன்றை காந்தி பூங்காவில் ஆரம்பித்து பழைய கச்சேரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 20ஆம் திகதி கடமை நிமித்தம் வெளியில் சென்ற கிராம உத்தியோத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் இதுவரை கைதுசெய்யப்படாததையடுத்து மாவட்ட ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து நேற்றுக்காலை 9.30 மணிக்கு சுகயீன விடுமுறையுடன் மட்டு. காந்தி பூங்காவில் கிராம உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடினர்.

இதனையடுத்து, ''நீதிவேண்டும், கைது செய் கைது செய், சமாதான அலுவலர்களான எமக்கு என்ன பாதுகாப்பு, மக்கள் சேவையை செய்யும் எங்களை பொலிஸார் ஏன் புறக்கணிப்பு, பொலிஸாரின் நடவடிக்கைதான் என்ன, தாக்கப்பட்ட கிராம உத்தியோகத்தருக்கு நீதி வேண்டும், அரச காணி மற்றும் அரச வளங்களைப் பாதுகாக்கும் எங்களைப் பாதுகாப்பது யார்?'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக நீதிமன்ற வீதியூடாக பழைய கச்சேரியை சென்றடைந்தனர். அங்கு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்றதால், அவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார் கூட்டத்துக்குச் சென்று மகஜரை கையளிக்க ஐவரை அனுமதித்தனர். கூட்டத்துக்கு சென்றவர்கள் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திராவிடம் மகஜரை கையளித்தனர்.

இது தொடர்பாக அவர் பொலிஸ் அத்தியட்சகரிடம் வினவியதையடுத்து, இன்று (நேற்று) இருவரை கைதுசெய்துள்ளதாகவும் ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, ஏனையவர்களை உடனடியாக கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, கடந்த 23ஆம் திகதி கிராம உத்தியோகத்தர் மீது தாக்குதலை மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு கோரி கோறளைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் 16 அடி நீள முதலை பிடிக்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, புளியந்தீவு வாவிக்கரை வீதி–2இல் சுமார் 16 அடி நீளமான முதலையொன்று ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு வாவியில் சஞ்சரித்த குறித்த முதலை அன்றையதினம் மாலை கரைக்கு வந்ததுடன், புளியந்தீவு கிராமத்துக்குள் நுழைய முற்பட்டபோது அதனை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் குறித்த முதலையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக குறித்த பகுதியில் மேய்ச்சலில் ஈடுபடும் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை குறித்த முதலை வேட்டையாடியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிப்பதுடன், குறித்த பகுதியிலுள்ள வாவியில் இம் முதலை சஞ்சரிப்பதனால் மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை முன்னெடுக்க முடியாது எனத் தெரிவித்து குறித்த முதலையை சரணாலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# பட்டிருப்பில் நிதி முகாமைத்துவ செயலமர்வு



(பாண்டிருப்பு செய்தியாளர்)

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக் குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் வழிகாட்டலில் கணக்காளர் திருமதி எஸ்.சுதர்சனா தலைமையில் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் பிரதான வளவாளராக கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் சிரேஷ்ட கணக்காளர் வை.ஹபிபுல்லா கலந்துகொண்டார்.

அத்துடன் பிரதி கல்விப் பணிப்பாளர் தனுஷியா ராஜசேகர் உட்பட அதிபர்கள், பாடசாலைகளில் நிதி முகாமைத்துவத்துக்கு பொறுப் பானவர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு 2025ஆம் ஆண்டில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள திட்டங்கள், அதற்கான நிதி திட்டமிடல்கள், அவற்றைக் கையாளும் முறைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.




**அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் ஏற்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.இஸ்ஸதீன் தலைமையில் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று (30) அட்டாளைச்சேனை பிரதான வீதியில் நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)**

# மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசாங்கத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசால் வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகள் அடங்கிய ஒரு தொகுதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஞாயிற்றுக்கிழமை (29) கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி சென்கொங் (Qi zhenhong) 'சீனாவின் சகோதர பாசம்' எனும் திட்டத்தின்கீழ் உலருணவுப் பொதிகளை வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர வழிகாட்டுதலின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் வைத்து 770 பொதிகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கென அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித்துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் முன்வைத்துள்ளனர்.

இதனையடுத்து, இலங்கைக்கான சீன அரசால் வழங்கப்பட்ட நிவாரணப்பொதி முதல் கட்டமாக மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெரிய உப்போடை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட 'சீன - இலங்கை சகோதர பாசம்' எனும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பொதியொன்றின் பெறுமதி 6,500 ரூபா என சீனத் தூதுவர் அவரது உரையின்போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த சீனத் தூதுவருக்கு அரசாங்க அதிபர் நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் சீனத் தூதுவரின் பாரியார் திருமதி ஜின் குவான், கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் கே.எம்.அப்துல்லாஹ், மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), சீனத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் வருடாந்த ஒன்றுகூடலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாக பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்றவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் சனிக்கிழமை அக்கரைப்பற்று மெங்கோ கார்டனில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவரும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான ஜே.எம்.நிஸ்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் மேலங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், மிக நீண்டகாலமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாக பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று செல்லும் ஐ.எல்.றாசிக், அப்பாஸ் எம்.நியாஸ், சீ.பி.எம்.ஹனிபா ஆகியோர் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், பல்வேறு அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் சுகாதாரத் துறைக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆற்றிவரும் அளப்பெரும் சேவை குறித்து பாராட்டி பேசிய பிராந்திய பணிப்பாளர், சகல பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் அவர்களது அலுவலகப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்காக Official bag ஒன்றையும் இந்நிகழ்வின்போது வழங்கினார்.



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொது நூலகங்களுக்குப் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் கையளிக்கும் நிகழ்வு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என்.பரமேஸ்வர வர்மன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களுக்கான நூல்களை அவற்றின் நூலகர்களான ஏ.எல்.முஸ்தாக், ஏ.எச்.தௌபீக், ஏ.சி.ஹரீஷா, எஸ்.எம்.ஆர்.அமீனுதீன் ஆகியோரிடம் கையளித்தனர். (சாய்ந்தமருது செய்தியாளர்)



மட்டக்களப்பு ,காவத்தமுனை ,வாகநேரி வயல்வெளி பிரதேசத்தில் நோய்வாய்ப்பட்ட நிலையில் 06 வயது மதிக்கத்தக்க காட்டு யானைக் குட்டியொன்று நேற்று திங்கட்கிழமை (30) உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். நடக்க முடியாத நிலையில் காணப்படும் யானைக் குட்டி தொடர்பாக உள்ளூர் விவசாயிகளால் கிரான் பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் ஞாயிற்றுக்கிழமையன்று சம்பவ இடத்துக்குச் சென்று சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது சிகிச்சை பலனின்றி யானை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)




அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் தொழில்கள் மற்றும் சொத்துகள் பாதிக்கப்பட்ட செங்கற்சூளை உரிமையாளர் 190 பேருக்கும் மாட்டுவண்டி உரிமையாளர் 62 பேருக்கும் நிதியுதவி வாங்கப்பட்டது. இதுதொடர்பான நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் எம்.எல்.எச்.பஸீர் தலைமையில் சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் பள்ளிவாசலில் நேற்று திங்கட்கிழமை (30) இடம்பெற்றது. (திகாமடுல்ல செய்தியாளர்)

# விஷ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழா





(கோணாவத்தை செய்தியாளர்)

அட்டாளைச்சேனை விஷ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழாவும் கலை நிகழ்ச்சியும் லொயிட்ஸ் விழா மண்டபத்தில் சனிக்கிழமை (28) நடைபெற்றது.

பாடசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.இர்பான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ், சொக்கமோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.றியாஸ், அதிபர்களான ஓ.எல்.எம்.றிஸ்வான், எஸ்.எம்.றஹீம், ஏ.கே.நஸீம், எம்.எச்.அப்துல் றஹுமான் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.ஐ.றியாஸ், ஐ.எல்.எம்.ரபீக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன், அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன.




மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில், காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை(29) காலை நடைபெற்றது. பிரதி அதிபர் திருமதி தே.குலேந்திரனின் ஏற்பாட்டில் அதிபர் சதாசிவம் ரகுநாதனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது பாடசாலை வளாகங்கள், வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சூழவுள்ள வடிகான்கள் சுத்தம் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் உப அதிபர் பி.சசிகரன், ஆசிரியர்கள், நூலக உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர் ஆகியோர் சிரமதான பணியில் ஈடுபட்டனர். (காரைதீவு செய்தியாளர்)

# சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தினால் கலைஞர்கள் எண்மர் விருது வழங்கி கௌரவிப்பு




(சீனக்குடா செய்தியாளர்)

மூதூர் - சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கலை இலக்கிய கூடலும் விருது வழங்கல் நிகழ்வும் மூதூர் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் ஞாயிற்றுக் கிழமை (29) மாலை இடம்பெற்றது.

இதன்போது பல்துறை கலைஞர்கள் 08 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வாழ்நாள் சாதனையாளர் விருதினை திருமதி மனோன்மணி கணேசபிள்ளையும் தலைக்கோல் விருதினை கூத்தர் க.தயாபரன், நாடகர் காளி காளிதாஸ் மற்றும் ஆடகி திருமதி சிவதர்சினி மனோஜ்குமார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இளம் கலைஞர்களுக்கான விருதை ஜனகன் சிறிதரன், ஊடகவியலாளர் நஹீம் முஹமட் புஹாரி மற்றும் ஜுனைட் முஹமட் இஹ்ஷான் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மகிழ் இசைவாணி விருதை மிதுர்சா அமலநாதன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

நினைவுச் சின்னமும் பொன்னாடையும் போர்த்தி பிரதி அமைச்சர் கௌரவிக்கப்பட்டமையும் இங்கு விசேட அம்சமாகும். இந்நிகழ்வில், சிறப்பு அதிதியாக தமிழ்நாட்டு பேராசிரியர் கி.பார்த்திபராஜாவினால் எழுதப்பட்ட 'தெருக்கூத்து ஒரு அறிமுகம்' என்ற நூல் வெளியீட்டு வைக்கப்பட்டதோடு, தெருக்கூத்து தொடர்பாக விசேட உரையையும் அவர் ஆற்றினார்.



மீராவோடை உதுமான் பாலர் பாடசாலையின் 32ஆவது மாணவர் வெளியேற்று விழா ஓய்வுபெற்ற கல்குடா வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் ஐ.எல்.அஷ்ரப் தலைமையில் மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக மீராவோடை அல்-ஹிதாயா வித்தியாலய அதிபர் ஏ.ஜே.மர்சூக், ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)




பாலமுனை College of happy Kids பாலர் பாடசாலையின் புதிய மாணவர்கள் அகரம் தொடும் விழாவும் பாலர்களின் விடுகை விழாவும் அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் பணிப்பாளர் ஏ.எம்.றிஸ்மியா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(29) இடம்பெற்றது. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார், கௌரவ அதிதிகளாக முன்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.
(திராய்க்கேணி செய்தியாளர்)



மூதூர் மத்திய அஹதியாவின் 50ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் வகையில் திருகோணமலை மாவட்ட அஹதியாக்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.வை.ஹதியதுல்லாஹ்வினால் மூதூர் மத்திய அஹதியாவின் பொன் விழா இலட்சினை அண்மையில்(22) வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அஹதியாவின் தலைவர் ஏ.எம்.அர்ஷத், உப தலைவர் மௌலவி ஹாபில், செயலாளர் மௌலவி ஏ.எம்.நுஸ்கி, உப செயலாளர் மௌலவி அயாஸ் மற்றும் ஞாயிறு பாடசாலையின் உப அதிபர் மௌலவி நிஷ்பாக் ஆகியோர் கலந்து கொண்டனர். (தோப்பூர் செய்தியாளர்)



மண்முனைப்பற்று, புதுக்குடியிருப்பு அகரம் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா அதன் தலைவர் செ.துஜியந்தன் தலைமையில் நடைபெற்றது. அம்பாறை ,திருக்கோவில் சீரடி சாய் கருணாலயத்தின் ஸ்தாபகர் நோர்வேயில் வசிக்கும் சீதா விவேக்கின் நிதி அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர் க.கோமகராசா ,சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் மா.சோமசூரியம், சமூகசேவை உத்தியோகத்தர் க.கமலராஜன், கிராமசேவையாளர் செ.டிலக்ஷன், ஆசிரியர் இ.வரதராஜன், சமூக செயற்பாட்டாளர்களான இளங்கீரன், கிருபேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
(பாண்டிருப்பு செய்தியாளர்)

# சிகிரியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கொரியா 2.4 பில்லியன் ரூபா நிதியுதவி



சிகிரியாவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தி சுற்றுலாத் துறையை மேம்படுத்த கொரிய சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனம் (KOICA) விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு யோசனை முன்வைத்துள்ளது.

இங்கு தொல்பொருளியல் திணைக்களத்தின் முழுமையான அனுமதியுடன் மத்திய கலாசார நிதியத்தின் மேற்பார்வையின் கீழ் உத்தேச வேலைத்திட்டத்தின் ஊடாக சிகிரியக் குன்றுக்குச் செல்லும் பாதை, மாற்றுப் பாதை நிர்மாணித்தல் ,சிகிரிய நூதனசாலை, சிற்றுண்டிச்சாலை மற்றும் அனுமதிச் சீட்டு கரும பீடம் ஆகிய வற்றை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 2.4 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டத்துக்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்கு இணங்க மத்திய கலாசார நிதியம் மற்றும் கொரிய சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனம் (KOICA) என்பவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து இடுவதற்கு இதன்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில்(27) புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் அமைச்சில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கொரிய சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனத்தைப் (KOICA) பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூர் பணிப்பாளர் யுங்ஜின் கிம் (Myungjin Kim) மற்றும் அமைச்சின் செயலாளர் ஏ. எம். பி.எம். பி. அதபத்து உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# கறுவா ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டம்



நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களுள் ஒன்றான கறுவாச் செய்கையின் மூலம் 2030ஆம் ஆண்டளவில் வருடத்துக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கறுவா உற்பத்தி வருடத்துக்கு 25,000 மெட்ரிக் தொன் வரை என்பதுடன், அதில் 19,000 மெட்ரிக் தொன்வரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இலங்கையிலிருந்து இலத்தீன் அமெரிக்க வலய நாடுகளுக்கு அதிகமாகக் கறுவா ஏற்றுமதி செய்யப்படுவதுடன், அவை 60% ஆனவை ஆகும். இவற்றில் மெக்சிகோ முன்னணி வகிக்கிறது.

கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர குறிப்பிடுகையில்; தற்போது கறுவா ஏற்றுமதியினால் இலங்கைக்கு வருடத்துக்கு 250 மில்லியன் டொலர் வெளிநாட்டு செலாவணி கிடைக்கிறது.

அது தவிர இலங்கையின் பிரதான பெருந்தோட்டப் பயிராக கறுவா உற்பத்தியை மேம்படுத்துவதற்கு 2025ஆம் ஆண்டிலிருந்து புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அதன்படி இதுவரை கிடைக்கப்பெற்ற வருமானத்தை இரு மடங்குகளாக அதிகரிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இந்திய முன்னாள் பிரதமர் மறைந்த கலாநிதி மன்மோகன் சிங்குக்கு இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு அஞ்சலி செலுத்தினார்.

# எழுதுவினைப் பொருட்களின் கொள்வனவுக்கு பாடசாலை மாணவர்களுக்கு கொடுப்பனவு

## அரசாங்கம் நிதி ஒதுக்கீடு

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு எழுதுவினைப் பொருட்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கிணங்க அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தலா ஆறாயிரம் ரூபா வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குடும்பப் பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளின் கல்வியில் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் நடத்திய “House hold Survey on Impact of Economic Crisis – 2023” தரவுக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. அதாவது பாடசாலை செல்லும் பிள்ளைகளில் 55 சதவீதமானோர் கல்வியில் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் இச் சதவீதம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகளில் 53.2 சதவீதமானோர் பாடசாலை எழுதுவினைப் பொருட்களை கொள்வனவு செய்வதை குறைத்து அல்லது நிறுத்தியுள்ளதுடன், 26.1 சதவீதமானோர் முன்னர் பயன்படுத்திய பாடசாலை எழுதுவினைப் பொருட்களை மீளப் பயன்படுத்துவதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறு பாதிக்கப்பட்ட பாடசாலை பிள்ளைகளின் கல்வியில் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கங்களை குறைக்கும் நோக்கில், 2025ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எழுதுவினைப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக பாடசாலை பிள்ளைகளுக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதற்கிணங்க அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களின் பிள்ளைகளின் எழுது கருவிப் பொருட்கள் கொள்வனவுக்கான தலா ரூ. 6,000.00 கொடுப்பனவு கடந்த 27 ஆம் திகதி வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் அஸ்வெசும பயனாளிகள் தவிர்ந்த ஏனைய வறிய பாடசாலைப் பிள்ளைகளுக்கு 2025ஆம் ஆண்டுக்கு 6000 ரூபா பெறுமதியான எழுதுகருவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை கல்வி உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதனூடாக பாடசாலைக் கல்விக்காக பெற்றோர் செலவிடும் சுமையைக் குறைத்து நிவாரணம் வழங்கி பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியைக் மேம்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

# இரத்தினபுரி மாவட்ட பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்கு 100 இலட்சம் ரூபா நிதி

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிவைப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக 100 இலட்சம் ரூபா முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுன் நபிவிழாவில் வழங்கி வைக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுன் நபிவிழா இரத்தினபுரி மாவட்டத்தில் இடம் பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை நடத்தியிருந்தன.

இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் வழிகாட்டலில் இரத்தினபுரி சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் (26) வியாழக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் டி. சுனில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது இரத்தினபுரி மாவட்டத்தில் 20 முஸ்லிம் பள்ளிவாசல்களின் அபிவிருத்திக்காக 100 இலட்சம் ரூபா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இரத்தினபுரி பள்ளிவாசல், இரத்தினபுரி ஜன்னத் பள்ளிவாசல் மற்றும் பலாங்கொடை பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களை நினைவு கூருமுகமாக தபால் தலை முத்திரையும் வெளியிடப்பட்டது.

சப்ரகமுவ மாகாண பிரதி பிரதம செயலாளர் திலினி தர்மதாச, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆரச்சி, மாகாண கல்வி பணிப்பாளர் தர்ஷனி இத்தமல்கொட , சப்ரகமுவ மாகாணத்தின் பிரதி, உதவி செயலாளர், தகவல் தொழில்நுட்ப செயலாளர், திட்டமிடல் செயலாளர், கல்வி உதவிச் செயலாளர், இரத்தினபுரி மாவட்டத்தின் உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர், முஸ்லிம் பள்ளிவாசல்களின் தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், இரத்தினபுரி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை இரத்தினபுரி மாவட்டத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், புத்தசாசன கலாசார அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் அசங்க ரத்னாயக்க, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், பிரதி, உதவிப் பணிப்பாளர்கள், மேலதிகப் பணிப்பாளர், திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திணைக்களத்தினால் ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்ற மீலாதுன் நபி விழாவானது இம்முறை 40 ஆவது தேசிய மீலாதுன் நபி விழாவாக இரத்தினபுரி மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

தேசிய மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கஸீதா, கிராஅத் ,கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றிபெற்ற 425 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுகளும் இதன்போது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். அத்துடன் பாரம்பரிய இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மீலாதுன் நபி விழா தொடர்பான விசேட உரையை அஷ்ஷெய்க் ரஸாத் ஸமான் நிகழ்த்தியதுடன் நன்றியுரையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் வழங்கினார்.







# மூன்று மில். ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நக்கல தோட்ட கரப்பந்தாட்ட மைதானம்

## ஊவா மாகாண ஆளுநரால் கையளிப்பு

(எம்.ஏ.எம்.ஹஸனார்)





மொனராகலை மாவட்ட தோட்ட இளைஞர்களின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தி வருவதுடன் அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளதாக ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சினால் மூன்று மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்டதாக புனரமைக்கப்பட்ட மொனராகலை, நக்கல இறப்பர் தோட்ட கரப்பந்தாட்ட மைதானம் ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகரவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மொனராகலை மாவட்ட செயலாளர் பன் ரத்நாயக்க, ஊவா மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் டீ.எம்.எஸ்.கே. பீ.தசநாயக்க உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன்போது விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கிவைப்பு





ஹொரணை, வாசனா பேகர்ஸ் நிறுவனத்தின் 30ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு ஹொரணை, போத், தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வாசனா பேகர்ஸ் ஸ்தாபகரும் நிறுவுனருமான தயானந்த போம்புவலவின் அனுசரணையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் மருதமுத்து சிவகுமார் தலைமை தாங்கினார்.

புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவுனர் திருமதி தனலட்சுமி மாதவனின் வேண்டுகோளுக்கிணங்க இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில், கிரீன் சேனல் கல்வி அமைப்பின் சர்வதேச தொடர்பாளர் திருக்கேஸ் செல்வசாமி,கிரீன் சேனல் அமைப்பின் தலைவர் கரு.பத்மநாதன், வாசனா பேகர்ஸ் சென்னை கிளையின் மேலாளர் ரவி பிரசாத், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பெருந்திரளான பொது மக்கள் கலந்துகொண்டனர்.



# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com




**முதலீட்டுத் துறையில் முன்னோடி நிறுவனமாகத் திகழும் First Capital Holdings PLC, அண்மையில் நடைபெற்ற பெருமைக்குரிய SLIM வர்த்தக நாம சிறப்பு விருதுகள் - 2024 நிகழ்வில், 'ஆண்டின் சிறந்த வர்த்தக நாமம்' எனும் உயரிய கௌரவத்தைப் பெற்றுக்கொண்டது. தொழிற்றுறையில் இந்நிறுவனம் கொண்டுள்ள ஒப்பற்ற அர்ப்பணிப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றைக் கௌரவிக்கும் முகமாக இவ்விருது அமைந்திருந்தது. இந்த உயர் விருதுக்கு மேலதிகமாக First Capital மேலும் மூன்று விருதுகளையும் பெற்றுக்கொண்டது. ஆண்டின் சிறந்த சேவை வர்த்தக நாமம் – தங்க விருது, ஆண்டின் சிறந்த உள்நாட்டு வர்த்தக நாமம் – வெள்ளி விருது மற்றும் ஆண்டின் சிறந்த B2B வர்த்தக நாமம் – வெண்கல விருது போன்றன அவையாகும்.**

## Evaவின் வலுவூட்டலுடன் 30ஆவது ஆண்டாகவும் அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி- 2024/2025

மகளிர் தொடர்பான சுகாதாரத் தயாரிப்புகளில் இலங்கையில் சந்தை முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்ற Eva, இலங்கையில் வலைப்பந்தாட்டத்தை பிரதான விளையாட்டுகளில் ஒன்றாக மாற்றுவதற்கான தனது முயற்சியாக தொடர்ந்து 30ஆவது ஆண்டாகவும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 'Eva அகில இலங்கை மற்றும் பகிரங்க பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி 2024/2025 க்கு பெருமையுடன் அனுசரணையளிக்க முன்வந்துள்ளது.




மேல் மாகாண வலைப்பந்தாட்ட சங்கத்தால் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சுற்றுப்போட்டி, 2025 ஜனவரி 11 முதல் 12 வரை கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள இலங்கை விமானப் படையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் வலைப்பந்தாட்ட நிகழ்வுகளின் நாட்காட்டியில் மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்ற இச்சுற்றுப்போட்டி, Eva சுற்றுப்போட்டியின் வெற்றிக்கிண்ணத்தை இலக்கு வைத்து போட்டி நிறைந்த களத்தில் பெரும் எண்ணிக்கையான திறமைமிக்க வலைப்பந்தாட்ட வீரர்களை ஒன்றுதிரட்டவுள்ளது.

இந்நிகழ்வில் ஆடவர் மற்றும் மகளிர் என இருபாலாரும் பங்குபற்றவுள்ளதுடன், புகழ்மிக்க இப்போட்டியைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் வீராங்கனைகளின் பங்கேற்பு 95% க்கும் மேலாக காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், நாடெங்கிலுமிருந்து எழுதிறன் மற்றும் திறமைமிக்க வலைப்பந்தாட்ட வீராங்கனைகளின் ஆட்டங்களைக் கண்டுகளிப்பதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

Eva அகில இலங்கை மற்றும் பகிரங்க பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி 2024/2025 நிகழ்வுக்கான பதிவுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், முறையே தமது சங்கங்களுடன் இணைந்த கழகங்கள், மேர்கன்டைல் நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் (உள்நாட்டு மற்றும் சர்வதேச) ஆகியவற்றின் அணிகள் இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும். இதில் பங்குபற்றுவதற்கு மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலைகளும் முறையே தமது மாகாண கல்விப்பணிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்று இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

2025 ஜனவரி 6 ஆம் திகதி அல்லது முன்பதாக தமது நுழைவுகளை சமர்ப்பிக்க முடியுமென்பதுடன் அணிகள் ஒவ்வொன்றும் 12 வரையான வீரர்கள் மற்றும் 3 அலுவலர்களைப் பதிவில் உள்ளடக்க முடியும். 076 1 717 286 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இச்சுற்றுப்போட்டியின் செயலாளரான நிமலிகா துஷாந்தியையோ அல்லது 077 7 216 150 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மேல் மாகாண வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளரான றியோ ரம்லானையோடோ தொடர்பு கொள்வதன் மூலமாக நுழைவு விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## புதிய ESG சாலை வரைபடமான 'Elevate'ஐ அறிமுகப்படுத்தும் Alumex PLC



Alumex PLC யானது இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் நிலைபேறான அலுமினிய உற்பத்திக்கான அளவுகோலை அமைக்கும் வகையிலும் 'Elevate' எனும் தலைப்பிலான விரிவான சூழல், சமூக,ஆளுகை (ESG) சாலை வரைபடத்தை அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்வு Hayleys தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஒரு முறையான ESG கட்டமைப்பைத் தழுவுவதற்கு பங்குதாரர்களுக்கு நீண்டகால பெருமதிப்பை உருவாக்கவும் நிலைபேறான எதிர்காலத்துக்கு பங்களிப்பு வழங்கவுமான Alumex இன் தூரநோக்கை இது சுட்டிக்காட்டுகிறது.

இந்த முக்கியமான தருணத்தில் Alumex PLC நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெடிவால கருத்துத் தெரிவிக்கையில், "நிர்மாணத் தொழிற்றுறையில் ESG காரணிகள் முக்கியமானவையாகும். குறிப்பாக, முழு மதிப்புச் சங்கிலியிலும் எமது உற்பத்தியின் போதான ஒவ்வொரு கட்டத்திலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள எமது விவேகமான வாடிக்கையாளர்களின் பார்வையில் இது முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. Alumex PLC நிறுவனத்தில் பொறுப்பான, நெறிமுறை ரீதியான மற்றும் நிலைபேறான வணிக நடவடிக்கைகளுக்கான சாலை வரைபடமாக எமது ESG கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். இது அலுமினியம் உற்பத்தித் துறையிலான, நிலைபேறான வணிக நடைமுறைகளில் ஒரு படி மேல் நோக்கி உயர்த்தும் என்பதோடு, புதிய வரையறைகளை அமைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். நிலைபேறான தன்மையை வழிநடத்துதல், புத்தாக்கம், பொறுப்புக்கூறலுக்கான பாதை வரைபடத்தை Elevate எமக்கு வழங்கு.

சூழல் தொடர்பான நிலைபேறான நடைமுறைகள் காபன் வெளியீட்டைக் குறைப்பதோடு வளங்களைத் திறம்பட நிர்வகிக்கின்றன. அவை இணக்கம் மற்றும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துகின்றன. சமூக ரீதியாக, ஊழியர்களின் பாதுகாப்பு, நியாயமான தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றுக்கு முன்னுரிமையளித்தல் மூலம் வணிக வளர்ச்சிக்கு பங்களிக்கும் புத்தாக்கங்களுக்கான கதவுகளைத் திறக்கவும் மீளெழுச்சியை வலுப்படுத்தவும் முடியுமென்பதை இது உறுதி செய்கிறது. வலுவான நிர்வாகமானது வெளிப்படைத்தன்மை மற்றும் நெறிமுறை ரீதியான செயற்பாடுகளை உறுதிசெய் வதோடு அபாயங்களைக் குறைத்து, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கிறது" - என்றார்.

## தினசரி 60,000 லீட்டர் பாலை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ள Ambewela Farms



Lanka Milk Foods (CWE) PLC (LMF) நிறுவனம், தனது Ambewela Farms இல் தனியாக 62,000 லீட்டர் பாலை தினசரி உற்பத்தி செய்து சாதனை படைத்து, அதிவிசேடமான தர ஒப்பீட்டு நியமமொன்றை நிலைநாட்டியுள்ளது. தினசரி 3,000 லீட்டர் என்ற மட்டத்திலிருந்து தற்போது தினசரி 60,000 லீட்டர் பால் உற்பத்தி என்ற அசுர வளர்ச்சியை அடையப்பெற்றுள்ளது. 2001ஆம் ஆண்டில் அரசிடமிருந்து இந்த தொழிற்சாலையை நிறுவனம் பொறுப்பேற்ற சமயத்தில் தினசரி உற்பத்தியின் அளவு 3,000 லீட்டருக்கும் குறைவாகவே காணப்பட்டது. தற்சமயம் இலங்கையின் தேசிய விநியோகத்துக்கு ஆண்டுதோறும் 20 மில்லியன் லீட்டர் பாலை பங்களித்து வருகின்ற Ambewela Farms, நவீனமயமாக்கம் நிபுணத்துவம் மற்றும் இடைவிடாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் மாற்றத்துக்கான சக்திக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த கவனமான திட்டமிடல், கணிசமான முதலீடுகள் மற்றும் புத்தாக்கமான பாற்பண்ணை நடைமுறைகளை அமுலாக்கம் செய்தல் ஆகியவற்றின் பலனாக இச்சாதனை அடையப்பட்டுள்ளது. நவீனமயமாக்கலில், ரூபா 5 பில்லியன் தொகை முதலீட்டின் அங்கமாக, 2019ஆம் ஆண்டில் இரண்டு தன்னியக்கமயமாக்கப்பட்ட பசுத் தொழுவம் மற்றும் பால் கறக்கும் கட்டமைப்புடன் முக்கியமான சாதனை மைல்கல்லொன்று எட்டப்பட்டது. இந்தக் கட்டமைப்புகள் இரு ஆண்டுகளுக்குள் பாலுற்பத்தியை இரட்டிப்பாக்கியுள்ளதுடன், பண்ணையை உலகத்தரம் வாய்ந்ததாகவும் மாற்றின. கறவைப்பசுக்களுக்கான சௌகரியம் முதல் கணினிமயப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கட்டமைப்புகள் வரை அனைத்தும் துல்லியமாகத் திட்டமிட்டப்பட்டு, மகத்துவத்தின் மீதான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கச் செய்துள்ளது.

இப்பண்ணையின் வெற்றியானது அதன் கட்டமைப்பு மூலமாக மாத்திரம் அடையப்பெற்ற ஒன்றல்ல, முன்னோக்கு சிந்தனை நடைமுறைகளும் இதற்கு காரணம். சர்வதேச ரீதியாக புகழ்பெற்ற வீரியமான காளை இனங்களிலிருந்து பெறப்பட்ட பாலின விந்துக்களை உபயோகித்து இனப்பெருக்கம் செய்யும் நவீன திட்டமானது, கூடிய அளவில் பால் தருகின்ற கறவைப் பசுக்களை உள்நாட்டில் இனப்பெருக்கம் செய்வதற்கு இடமளித்துள்ளது. மரபணு ரீதியாக மிகச் சிறந்த இந்த கறவைப் பசுக்கள், உலகெங்கிலும் வணிக ரீதியான வளர்க்கப்படுகின்ற சிறந்த கறவைப்பசு இனங்களுக்கு ஈடானவையாகக் காணப்படுவதுடன், 305 நாள் பால் சுரப்புச் சக்கரத்தின் போது 12,000 லீட்டர் என்ற பாரிய அளவிலான பாலைத் தருகின்றன. மேலும், கடுமையான ஆரோக்கியம் சார்ந்த கண்காணிப்பு மற்றும் தடுப்பு ஏற்பாடுகள் இக்கறவைப் பசுக்கள் ஆரோக்கியமாகவும் வியாதிகள் அற்றவையாகவும் பால் உற்பத்தித்திறனை பேணுகின்றவையாகவும் தொடர்ந்தும் இருப்பதை உறுதி செய்கின்றன.

## எட்டு விருதுகளை வென்று சாதனையை பதிவு செய்துள்ள NDB வங்கி



இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) ஏற்பாடு செய்திருந்த தேசிய விற்பனை விருதுகள் (NSA) 2024 இல் NDB வங்கி ஒரு முக்கியமான பல விருதுகளை வென்று சாதனையைப் பதிவு செய்துள்ளது. இந்த ஆண்டு விழாவில் வங்கியின் விற்பனைக் குழுவானது தனது சிறப்புமிக்க செயற்றிறன்களுக்காக எட்டு விருதுகளைப் பெற்றது.

இந்த மாலை நிகழ்வின் சிறப்பம்சமாக கசுன் ஜெயவர்தன, ஒட்டுமொத்த தேசிய விற்பனை முகாமையாளருக்கான தங்க விருதை வென்றார். இந்த விருதானது அவரது தலைமைத்துவத்தையும் விற்பனைச் செயற்பாட்டுக்கு அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. முன்னணி வரிசை வங்கியியல் பிரிவில் நேத்மி குமாரிஹாமி தங்க விருதை பெற்றார். அதேவேளை, கவீச வீரரத்ன வெள்ளி விருதைப் பெற்றார். இவ்விருதுகள் வங்கியியல் நடவடிக்கைகளில் முன்னணியில் நின்று சிறப்பான சேவையை வழங்குவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

NDB இன் வெற்றியை மேலும் மேம்படுத்தும் வகையில் விற்பனை மேற்பார்வையாளர் வங்கியியல் பிரிவில் இரேஷா ஜயசிங்க தங்க விருதுடன் கௌரவிக்கப்பட்டார். அதேநேரத்தில், சிறந்த செயற்றிறன் மற்றும் குழு தலைமைத்துவத்துக்காக எஸ்.வசந்தன் அதே பிரிவில் வெண்கல விருதைப் பெற்றார். சம்மில்பண்டார பிராந்திய முகாமையாளர் வங்கியியல் பிரிவில் சிறந்து விளங்கிய நிலையில் பிராந்திய விற்பனை முகாமைத்துவத்தில் தனது நிபுணத்துவம் மற்றும் மூலோபாய புத்திசாலித்தனத்துக்காக தங்க விருதைப் பெற்றார்.

வங்கியின் பாராட்டுகளுடன் சேர்த்து நிரோஷன் கமகே விற்பனை நிறைவேற்று வங்கியியல் பிரிவில் மெரிட் விருதைப் பெற்றார். மேலும் பிரவீன் செனவிரத்ன பிராந்திய விற்பனை முகாமையாளருக்கான வெண்கல விருதைப் பெற்றுள்ளார்.



**கொமர்ஷல் வங்கியானது, வங்கியின் திரிபல பசுமை அபிவிருத்திக் கடன் திட்டத்தினூடாக ஸ்மார்ட் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துவதற்காக AgStar PLC உடன் பங்குடைமை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் மற்றும் AgStar PLC இன் நிறைவேற்றுப் பிரதித் தலைவர் இந்திக குணவர்தன ஆகியோர் இரு நிறுவனங்களின் சிரேஷ்ட பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தத்தைப் பரிமாறிக்கொண்டனர்.**

## சியெட் களனி ஹோல்டிங்ஸ் அறிமுகப்படுத்தும் ரேடியல் டயர்கள்




இலங்கையின் வாகன ஆர்வலர்களுக்கான ஆடம்பர கார்கள் மற்றும் SUV களுக்கு தேவையான உயர் செயற்றிறன் கொண்ட ரேடியல் டயர்களை இப்போது சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CEAT Kelani Holdings) நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட உலக தரம் வாய்ந்த, 'ஐரோப்பிய வரிசையின்' மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த டயர் தொகுதியானது ஆறு வெவ்வேறு வடிவங்களில் 19 டயர் அளவுகளை உள்ளடக்கியது. 16 முதல் 18 அங்குல விளிம்பு அளவு கொண்ட இந்த டயர்கள் ஐரோப்பிய அளவுருக்களின்படி உயர் செயற்றிறன் (HP) மற்றும் அல்ட்ரா உயர் செயற்றிறன் (UHP) என வகைப்படுத்தப்படுகின்றன. மேலும் அவை ஜேர்மனியின் பிராங்பேர்ட்டில் உள்ள சியெட் R&D நிலையத்தில் உருவாக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஐரோப்பிய வீதிகளில் பயன்பாட்டிலுள்ள இந்த டயர் தொகுதிகளை இலங்கை வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுபவமாக வழங்குவதற்கு சியெட் தொடர்ந்து முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது" - என்று சியெட் களனியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஷமல் குணவர்தன தெரிவித்தார். இந்த டயர்கள் வாகன இயக்கத்துக்கான நிலைத்தன்மை, துல்லியமான திசைமாற்றி மற்றும் நிலப்பரப்புகளில் வாகன நிறுத்தத்துக்கான பொறுப்புத்தன்மை போன்ற முக்கியமான அம்சங்களில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை உள்ளடக்கியதாகும். இது எங்களின் பரந்த ரேடியல் டயர் தொகுதி வரிசைக்கு ஓர் அற்புதமான மேலதிக சேர்க்கையாவது நிச்சயம்"

இந்த வரிசையில் மிகச் சிறிய டயரான - Secura Drive 195/55 R16 - இது Toyota Premio,Toyota Allion, Kia Stonic, MG- ZS, Toyota Prius மற்றும் Honda Civic போன்ற வாகனங்களுக்கு பொருந்தும். மேலும், பெரிய டயரான 265/60 R18 - CrossDrive AT ஆனது Toyota Land Cruiser, Mitsubishi Montero மற்றும் Toyota Hilux SUV களுக்குப் பொருந்தும், சியெட் ஐரோப்பிய வரிசையானது ஐரோப்பிய வாகன உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கும் கடுமையான தராதரங்களைப் பூர்த்தி செய்வதாக உள்ளது.

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தனது 100ஆவது வயதில் உடல் நலக் குறைவு காரணமாகக் காலமானார்.

அமெரிக்காவின் 39 ஆவது ஜனாதிபதியான இவர் ஒரு வருட காலமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு பிளெய்ன்ஸ், ஜோர்ஜியாவில் உள்ள தனது வீட்டில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் (29) இல் சிகிச்சை பலனின்றிக் காலமானார்.

ஜிம்மி கார்ட்டர் 1977 ஆம் ஆண்டு முதல் 1981 வரை அமெரிக்க ஜனாதிபதியாகப் பணியாற்றி வந்தார். மனிதநேயமிக்க சிறந்த சேவைக்காக 2002ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்.

முன்னாள் ஜனாதிபதியின் மறைவையொட்டி அமெரிக்க வெள்ளை மாளிகையில் அந்நாட்டின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

# என்ன நடந்தது, நான் ஏன் இங்கே இருக்கிறேன்? விமான விபத்தில் உயிர் தப்பியவர் கேள்வி



என்ன நடந்தது? நான் ஏன் இங்கே இருக்கிறேன்? என தென்கொரிய விமான விபத்தில் உயிர் தப்பிய பயணிகள் இருவருள் ஒருவர் டாக்டரிடம் கேட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து, 175 பயணிகள், 6 ஊழியர்கள் என 181 பேருடன் தென்கொரியாவுக்கு புறப்பட்ட பயணிகள் விமானம், அந்நாட்டின் முவான் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது, ஓடுபாதையிலிருந்து விலகி, கொங்கிரீட் தடுப்புச் சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் 179 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் 32 வயதான லீ மற்றும் 25 வயதான குவான் ஆகிய இரு விமானப் பணிப்பெண்கள் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இவர்கள் இருவரும் இடிபாடுகளில் வால் பகுதியில், பயணிகளுக்கு உதவி செய்யப் பணியில் இருந்துள்ளனர். என்ன நடந்தது? நான் ஏன் இங்கே இருக்கிறேன்? என தென்கொரிய விமான விபத்தில் உயிர் தப்பிய பயணிகள் இருவருள் ஒருவர் டாக்டரிடம் கேட்டுள்ளார்.

இவர்கள் இருவராலும் விபத்தை நினைவுபடுத்த முடியவில்லை. இவர்கள் இருவரிடமும் உடல்நிலை குறித்து விசாரித்த போது அவர்கள் சுயநினைவை இழந்தமை தெரியவந்தது.

32 வயதான லீ என்பவருக்கு இடது தோள்பட்டை மற்றும் தலையில் காயமேற்பட்டுள்ளது. மற்றொரு விமானப் பணிப்பெண்ணான 25 வயதான குவானுக்கு கணுக்கால் எலும்புமுறிவு மற்றும் அடிவயிற்றில் காயமேற்பட்டுள்ளது. இவர்கள் இருவரது உயிருக்கும் ஆபத்தில்லை. இவர்கள் சுயநினைவின்றி இருப்பதால் விபத்து குறித்த விவரங்கள் ஏதும் சேகரிக்க முடியவில்லை. இவ்வாறு டாக்டர்கள் தெரிவித்ததாக தென் கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# மணிக்கு 450 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் உலகின் அதிவேக ரயில்

**சீனாவில் அறிமுகம்**



மணிக்கு 450 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் உலகின் அதிவேக ரயிலை சீனா ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்தது.

மேம்படுத்தப்பட்ட 'சி.ஆர். 450' எனும் இந்த புல்லட் ரயில் நவீன தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் பயண நேரம் வெகுவாகக் குறையுமென சீனா தெரிவித்துள்ளது.

இது குறித்து சீன ரயில்வே நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சோதனை ஓட்டத்தின்போது மணிக்கு 450 கி.மீ. வேகத்தில் பயணித்து சி.ஆர்.450 புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

வேகம், எரிசக்திப் பயன்பாடு, உள் இரைச்சல் குறைப்பு, பிரேக் செயற்பாடு உள்ளிட்டவற்றில் உலக அளவில் புதிய தரநிலைகளை இந்த ரயில் நிர்ணயித்துள்ளது. தற்போது செயற்பாட்டில் உள்ள மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் அதிவேக 'சி.ஆர்.400' புல்லட் ரயிலை விட இதன் வேகம் அதிகமாக உள்ளது. சி.ஆர்.450 ரயிலை பயன்பாட்டுக்கு கொண்டுவர பல்வேறு கட்ட சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன' - எனத் தெரிவிக்கப்பட்டது.

சீனாவின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் 47,000 கி.மீ. தொலைவுக்கு அதிவேக ரயில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெய்ஜிங்-ஷாங்காய் வழித்தடம் வழியே இயக்கப்படும் ரயில்கள் மிகவும் இலாபகரமானதாக உள்ளன. பிற வழித்தடங்களில் பெரிய அளவில் இலாபம் இல்லை என்றபோதும் அதிவேக ரயில் சேவைகள் மூலம் நாட்டின் தொழில் வளர்ச்சி மேம்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் தாய்லாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கும் அதிவேக ரயில்களை சீனா ஏற்றுமதி செய்துள்ளது.

# தரையிறங்கும்போது விமானத்தில் தீ

## உயிர்தப்பிய 80 பயணிகள்



கனடாவின் ஹாலிபேக்ஸ் விமான நிலையத்தில் எயார் கனடா நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் சுமார் 80 பயணிகளுடன் தரையிறங்கியது. ஆனால், விமானம் தரையிறங்கும்போது அதன் லேண்டிங் கியரில் பழுது ஏற்பட்டது. இதனால் இறக்கைப் பகுதி ஓடுபாதையில் உரசி, விமானத்தில் திடீரென தீ பற்றியது.

விமானத்தில் தீப்பற்றியதைப் பார்த்த பயணிகள் பயத்தில் அலறத் தொடங்கினர். இதற்கிடையில் விமான நிலைய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர். இந்தச் சம்பவத்தில் விமானத்திலிருந்த 80 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு முதலுதவிச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பான காட்சிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. முன்னதாக தென்கொரியாவில் விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்த சிலமணி நேரங்களில் கனடாவில் விமான விபத்து நிகழ்ந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பி.டி.எஸ். இசைக் குழுவினரை சந்திக்க கடத்தல் நாடகமாடிய 3 சிறுமிகள்



கொரியாவின் பிரபல பி.டி.எஸ். இசைக்குழு மீதான ஆர்வத்தால் அவர்களைச் சந்திக்கும் கனவை நிறைவேற்ற 3 சிறுமிகள் கடத்தல் நாடகமாடியுள்ளனர்.

இந்திய, மராட்டியத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் தென் கொரியாவுக்குச் சென்று பிரபலமான பி.டி.எஸ். பொப் இசைக்குழுவினரைச் சந்திப்பதற்காக தாங்கள் கடத்தப்பட்டதாகக் கடத்தல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்.

மராட்டிய மாநிலம் தாராஷிவ் மாவட்டத்தைச் சேர்ந்த 11 வயது சிறுமி மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுமிகளும் தென் கொரியாவுக்குச் செல்லத் தேவையான பணத்தை சம்பாதிக்க புனே செல்லத் திட்டமிட்டனர். அதற்காக, தாராஷிவ் பொலிஸ் உதவி எண்ணுக்கு அழைத்து மூன்று சிறுமிகள் பாடசாலை வேனில் வலுக்கட்டாயமாகக் கடத்தப்பட்டுச் செல்வதாகக் கூறியுள்ளனர். பொலிஸார் உடனே நடவடிக்கை எடுத்து அந்த செல்போன் எண்ணைக் கண்டுபிடித்தனர். அந்த எண் ஒமெர்காவிலிருந்து புனே செல்லும் அரச போக்குவரத்து பஸ்ஸில் பயணம் செய்த ஒரு பெண்ணுடையது என்பதைக் கண்டறிந்தனர்.

ஒமெர்கா பொலிஸார், மொஹோலில் பஸ் நிலையத்தில் கடை நடத்தும் ஒரு பெண்ணைத் தொடர்பு கொண்டனர். இதையடுத்து அந்தப் பெண்ணின் உதவியுடன் 3 சிறுமிகளும் மொஹோல் பஸ்ஸில் புனே செல்லும் பஸ்ஸிலிருந்து மீட்கப்பட்டு, உள்ளூர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து, பொலிஸார் சிறுமிகளிடம் இது குறித்து விசாரித்தனர். அதற்கு அந்தச் சிறுமிகள், புனேவுக்குச் சென்று அங்கு வேலை செய்து தேவையான பணத்தைச் சம்பாதித்து பின்னர் கொரியா சென்று பி.டி.எஸ். பொப் இசைக்குழுவினரைச் சந்திக்கவே இவ்வாறு தாங்கள் திட்டமிட்டதாகக் கூறினர்.

# விசா குறித்த நிலைப்பாட்டை மாற்றிய டொனால்ட் ட்ரம்ப்



எச்-1 பி விசாவை நான் எப்போதும் ஆதரிக்கிறேன் என அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால், 2016ஆம் ஆண்டில் ட்ரம்ப் இந்தத் திட்டம் குறித்து கடும் விமர்சனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றிருக்கிறார். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார். அதன் பின்னர் அமெரிக்காவில் மிகப்பெரிய அளவில் பிரச்சினைகள் வெடிக்கலாம் என சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதனிடையே அவர் தனது ஆட்சியில் குடியேற்றம் தொடர்பாக கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமென்று அறிவித்துள்ளார். இதனால் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் எச் 1-பி விசாவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படலாமென்றும் சலசலக்கப்பட்டது.

குறிப்பாக, 2016ஆம் ஆண்டில், ட்ரம்ப் இந்தத் திட்டம் குறித்து கடும் விமர்சனம் தெரிவித்திருந்தார். பின்னர் கொவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார சவால்களையடுத்து கட்டுப்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், இது குறித்து ட்ரம்ப் கூறும்போது, "மிகவும் திறமையான தொழிலாளர்கள் நாட்டுக்குள் நுழைய உதவும் சிறப்பு விசா திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். நான் எப்பொழுதும் எச்1-பி விசாக்களை விரும்புகிறேன். நான் எப்போதும் விசாக்களுக்கு ஆதரவாக இருக்கிறேன். அதனால்தான் நாங்கள் அவற்றை வைத்திருக்கிறோம்" - என்றார்.

ட்ரம்பின் ஆதரவாளரான எலான் மஸ்க்குக்கும் தொழிலதிபரும் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான விவேக் ராமசாமிக்கும் இது குறித்து வார்த்தைப்போர் வெடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வீடுகளில் ஜன்னல் வைக்க ஆப்கன் அரசு தடை விதிப்பு



ஆப்கானிஸ்தானில் உள்ள வீடுகளில் பெண்கள் புழங்கும் இடங்களில் ஜன்னல்கள் வைப்பதற்கு தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணியிலிருந்து நேட்டோ படைகள் கடந்த 2021 இல் வெளியேறிய பிறகு தலிபான் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின.

முன்பைப் போன்ற ஆட்சி முறை தற்போது இருக்காதென்றும் பெண்களுக்கு உரிமை வழங்கப்படுமென்றும் தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தெரிவித்திருந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு பெண்கள் பள்ளி, கல்லூரி செல்வதற்கும் பணி புரிவதற்கும் தடை விதித்து தலிபான்கள் உத்தரவிட்டனர். பெண்களுக்கான பேச்சுச் சுதந்திரம் முழுமையாகப் பறிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் புதிதாக வீடு கட்டுபவர்கள் பெண்கள் அதிகம் புழங்கும் சமையல் அறை, வீட்டின் முற்றம் உள்ளிட்ட பகுதிகளில் ஜன்னல்கள் வைக்கத் தடை விதித்துள்ளனர்.

மேலும், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகளில் குறிப்பிட்ட இடங்களில் ஜன்னல்கள் இருந்தால் சுவரெழுப்ப வேண்டுமெனவும் அல்லது மறைக்கவேண்டுமெனவும் தலிபான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

அதேபோல், அண்டை வீட்டின் கிணற்றுப் பகுதி தெரியும் வகையில் இருக்கும் ஜன்னல்களையும் அகற்ற உத்தரவிட்டுள்ளனர்.

இதன்மூலம் பெண்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுமென்றும் தேவையில்லாத பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புகள் குறையுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பல்வேறு வகையிலும் பெண்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ள நிலையில், வீட்டிலிருக்கும் பெண்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

# பாகிஸ்தானில் பஸ் விபத்து 10 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் மியான்வாலியில் இருந்து ராவல்பிண்டிக்கு பயணிகள் பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. பஸ்ஸில் 30க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். அட்டோக் மாவட்டத்திலுள்ள வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக பஸ் வீதியோரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், பஸ்ஸில் பயணம் செய்த 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 22 பேர் படுகாயமடைந்தனர். அவர்களை அவ்வழியாகச் சென்றவர்களின் உதவியுடன் பொலிஸார் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். பஸ் அதிவேகமாக சென்றதே விபத்துக்கான காரணமெனச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தானில் நெடுஞ்சாலைகளில் அடிக்கடி வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. இதற்கு முக்கிய காரணங்கள் அதிக வேகம், ஆபத்தான முறையில் வாகனங்களை முந்திச் செல்லுதல் மற்றும் போக்குவரத்து விதிகளைப் புறக்கணிப்பது போன்றவையாக உள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# நெதன்யாஹூக்கு அறுவை சிகிச்சை



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ கடந்த வாரம் உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் ஜெருசலேமில் உள்ள ஹடாசா மருத்துவ நிலையத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார். அதில் அவரது சிறுநீர் பாதையில் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து நெதன்யாஹூக்கு புரோஸ்டேட் அகற்றும் அறுவை சிகிச்சை செய்யவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நெதன்யாஹூக்கு குடலிறக்க அறுவை சிகிச்சை செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னதாக கடந்த ஆண்டு அவருக்கு பேஜ்மேக்கர் பொருத்துவதற்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 14 மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் ஹமாஸ் இஸ்ரேல் போருக்கு மத்தியில் இந்த அறுவை சிகிச்சை நடைபெறவிருக்கிறது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்






(ஜோசப் நயன்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம் நேற்று (30) திங்கட் கிழமை காலை இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஸ் தரிப் பிடத்தின் முன்பாக கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் அருட்தந்தையர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள்,சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்,பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர்.

# யாழில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் கவனயீர்ப்புப் போராட்டம்






(கே .குமணன்)

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று (30) யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டம் யாழ். முனியப்பர் கோவிலில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் வரை சென்று போராட்டம் இடம்பெற்றது.

இப்போராட்டத்தை வடக்கு மற்றும் கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை ஏற்பாடு செய்தது.போராட்டத்தில் ஈடுபட்டோர், சர்வ தேச தலையீட்டுடன் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறல் உறுதிசெய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

வாழ்நாள் முழுவதும் கவலையில் ஆழ்ந்து காணாமல்போனவர்களைத் தேடிக்கொண்டிருக்க முடியாது. சர்வதேச சமூகம் எங்களை திரும்பிப்பார்க்க வேண்டும். எமக்கு நியாயம் வழங்க வேண்டுமென்ற கோஷங்களை எழுப்பியவாறு உறவினர்கள் பலர் காணாமலாக்கப்பட்டவர்களின் புகைப்படங்களைத் தாங்கி கண்ணீருடன் பங்கேற்றனர்.

# யாழில் சட்டவிரோதமாக பனை மரங்களை வெட்டியவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!



(பு.கஜிந்தன்)

யாழில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீது நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இருபாலை மற்றும் நீர்வேலிப் பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இந்நிலையில், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி. சகாதேவனின் நேரடியான அதிரடிக் கண்காணிப்பு நடவடிக்கையில் பனை மரங்களை வெட்டியவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்புப் பகுதியில் சட்ட விரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வாறு சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்படுவதாகவும் தெரிவித்த பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பனை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தாம் விரைந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மக்கள் தமது தேவைகளுக்குப் பனை மரங்களை வெட்டுவதற்குப் பொருத்தமான பனை மரங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு கூடிய திட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவிருப்பதால் அதுவரை மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் தாழ்மையான வேண்டுகோளொன்றை விடுத்துள்ளதுடன், எந்தப் பகுதியிலாவது பனை மரங்கள் வெட்டுவதை அறிந்தால் மக்கள் உடனடியாக 0779273042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பூவரசன்குளத்தில் துப்பாக்கி கோடாவுடன் ஒருவர் கைது!



(சிவகுமார் திவியா)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் கோடாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பூவரசன் குளம் பொலிஸார் நேற்று (30) தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இரண்டாம் செங்கல்படை பகுதியில் விசேட சுற்றி வளைப்பொன்றை பூவரசன்குளம் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் பெரலொன்றில் அடைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்திக்கான கோடா என்பன மீட்கப்பட் டதுடன், அதனை உடைமையிலும் வைத்திருந்த நிலையில் நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# வடமாகாண ரீதியில் நடைபெற்ற ஆணழகன் - பெண்ணழகி போட்டி!




(பு.கஜிந்தன்)

யாழ். மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்திச் சங்கம் நடத்திய 6ஆவது வடக்கு மாகாண உடற் கட்டமைப்பு ஆணழகன் (Body building) மற்றும் பெண் உடலமைப்பு அழகி (Women physique) ஆகிய போட்டிகள் யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இரவு (28) இடம்பெற்றன.

வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகனுக்காக இடம்பெற்ற போட்டியில், வவுனியா DFC உடற் கட்டமைப்பு நிலையம் சார் பாகப் போட்டியிட்ட சத்தியசீலன் பிரதீப் முதலாம் இடத்தைப்பெற்று வட மாகாண உடற்கட்டமைப்பு ஆணழகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாம் இடத்தை மன்னார் TSP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட லியோன் ஜோயல் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் இடத்தை வவுனியா JRP உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட சுகுமார் ரஞ்சித்குமார் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, பெண்கள் உடலமைப்பு அழகிகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில், வவுனியா DFC உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட ஜோசப் ஜோன்சன் தவச்செல்வி வடமாகாண பெண் உடலமைப்பு அழகியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாம் இடத்தை நியூ கெல்த் பிற்னஸ் சார்பாகப் போட்டியிட்ட மோனிஷா மகேந்திரராஜா பெற்றுக் கொண்டார். மூன்றாவது இடத்தை நோத் சென்ரர் உடற்கட்டமைப்பு நிலையம் சார்பாகப் போட்டியிட்ட ஜெயபாணி ஜெகநாதன் பெற்றுக்கொண்டார்.

# வவுனியாவும் வடக்கு மாகாணம் என்றுணர்ந்து உயரதிகாரிகள் கடமையாற்ற வேண்டும்



## திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு

''வடமாகாணத்திலிருக்கும் உயரதிகாரிகள் வவுனியாவும் வடக்கு மாகாணம் என்றுணர்ந்து கடமையாற்ற வேண்டும்'' - என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''சூடுவெந்தபுலவு பகுதியிலுள்ள பாடசாலையில் தகவல் தொடர்பாடல பாடம் கற்பித்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டு 6 மாதம் கடந்தும் அவர் அங்கு செல்லவில்லை. இதனால் அந்த மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படடுள்ளது.

செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்து நாகரிக பாடத்துக்கு ஆசிரியர் இல்லை. ஏன் அந்த வெற்றிடம் நிரப்பப்படவில்லை? வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித ஆசிரியர்கள் பற்றாக்குறை. யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 கணித ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர்.

வடமாகாணத்தில் இருக்கும் உயரதிகாரிகள் வடக்கு மாகாணமென்றால் யாழ். மாவட்டம் மட்டும்தான் என்றா நினைக்கிறார்கள்? வவுனியாவும் வடக்கு மாகாணம்தான். இனிமேல் இவ்வாறான கூட்டங்களுக்கு மாகாணப் பணிப்பாளர்களையும் அழைக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு இது விளங்கும்.

பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்தால் விபரத்துடன் தாருங்கள். நாம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடனும் கல்வியமைச்சுடனும் இதுபற்றிக் கதைக்கின்றோம். கிராமப்புறப் பாடசாலைகளில் சில மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுத முடியாத நிலையில் உள்ளனர். அடிப்டைக் கல்விகூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தூர இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் ஒரு பஸ் மாறி வரும் அளவுக்குத்தான் இடமாற்றங்களை வழங்குங்கள். சில ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு பஸ்களில் சென்றே கற்பிக்கின்றார்கள். பஸ் தாமதமாகச் சென்றால் கைவிரல் அடையாளம் வைக்கும்போது தாமத வருகையாக அது பதிவாகிறது. இதனால் காலையிலேயே அந்த ஆசிரியர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டால் எவ்வாறு சிறந்த கல்வியை வழங்க முடியும்? ஆகவே, தூர இடங்களுக்கு பஸ்ஸில் சென்று கற்பிக்கும் ஆசிரியர்களின் தாமத வருகையைக் கணக்கிலெடுக்காத வகையில் மாற்று ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டும்'' – என்றார்.

# தமிழர் தாயகத்தில் மாணவர்களின் கல்வியில் தற்போது வீழ்ச்சி

## ரவிகரன் எம்.பி. கவலை



(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களில் எழுச்சிபெற்றிருந்த மாணவர்களின் கல்வி தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கவலை தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்துள்ள கல்வியில் மீளெழுச்சி தேவையெனவும் அதற்காக உதவுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை, பத்தாம் குறிச்சி, அறிவொளி மையம் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அண்மையில் தமது கல்விச் சுற்றுலாவின்போது முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த மாணவர்கள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இல்லத்துக்குச் சென்றதுடன், கலந்துரையாடலொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் மாணவர்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங் களில் மாணவர்களின் கல்வித்தரம் முன்னிலையில் இருந்தது. ஆனால், தற்போது வடக்கு, கிழக்கில் எமது மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து செல்கின்ற நிலையையே காண்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

எனவே, அனைவரும் கல்வி கற்கவேண்டும், சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும், உயர்ந்த நிலைகளைப் பெறவேண்டும் என்பதே மாணவர்கள் அனைவரதும் ஒரே இலக்காக இருக்கவேண்டும். எமது மாணவர்கள் கல்வியில் பிரதேசம், மாவட்டம், மாகாணம் என்ற நிலைகளைக் கடந்து தேசிய ரீதியிலும் வெற்றிபெறவேண்டும்.

மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்பதற்காக உதவிகளை வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறிருக்கும்போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் தேசியரீதியில் முதல்நிலை பெற்றார்கள் என்ற நிலையை ஏன் ஏற்படுத்த முடியாது? அது மாணவர்களான உங்களின் கைகளிலேயே இருக்கின்றது.

அதேவேளை, கல்வியில் சிறந்து விளங்குவதைப் போல ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவேண்டும். வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பிள்ளைகள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் என்ற நிலையைக் கொண்டுவரவேண்டும்.

இவ்வாறு எமது மாணவர்கள் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கும்போது எமது அடுத்தடுத்த சந்ததியினர் சிறந்து விளங்குவார்கள்'' - என்றார்.

# காடுகளில் இராணுவம் முகாம் அமைக்கலாம்: மேய்ச்சல்தரைக்கு அனுமதி இல்லை!

## மக்கள் விசனம்

(சிவகுமார் திவியா)

வவுனியாவில் பெரும் காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவம் முகாம் அமைத்துள்ளது. ஆனால், கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரை அமைப்பதில் மாத்திரம் திணைக்களங்கள் அக்கறையில்லாமல் செயற்படுவதாக வவுனியா ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உபாலி சமரசிங்க தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியாவில் மேய்ச்சல்தரை இல்லாமல் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். மழை காலங்களில் அதன் நிலைமை மேலும் மோசமடைவதுடன் பால் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுகின்றது

இராணுவம் பெரும் காடுகளில் பல ஏக்கர் கணக்கான காணிகளைப் பிடித்து முகாம் அமைத்துள்ளது. ஆனால், நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் கால்நடைகளுக்கு மேய்ச்சல்தரை வழங்குவதில் அதிகாரிகள் பின்னடிப்பதாகப் பொதுமக்கள் குற்றஞ்சுமத்தினர்.

குளத்தின் அலைகரைப் பகுதிகளில் மேய்ச்சல்தரை அமைப்பது தொடர்பாக ஆராயுமாறும் அரச காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கும் நபர்களிடமிருந்து அந்தக் காணிகளைப் பறித்து மேய்ச்சல்தரை அமைப்பது தொடர்பாகவும் பரிசீலிக்க முடியும் - என பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் இதன்போது தெரிவித்திருந்தார்.

# வெள்ளப்பெருக்கால் விவசாயிகள் பாதிப்பு

## இழப்பீடு வழங்க நடவடிக்கை

(சிவகுமார் திவியா)

வவுனியாவில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளப்பெருக்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் செய்கைபண்ணப்பட்ட 3529.25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந் துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக் கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அழிவடைந்த நெற்காணிகள் தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள காப்புறுதிச் சபையின் உத்தியோகத்தர்களால் மதீப்பீடு செய்யும் பணிகள் அண்மைய நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

மதிப்பீட்டின் அடிப்படையில் 1387.5 ஏக்கர் நெற்காணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஏக்கருக்கும் தலா 14,400 ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.




# ஐ.சி.சி. விருது பரிந்துரையில் மூன்று பிரிவுகளில் நான்கு இலங்கையர்கள்

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2024 ஆம் ஆண்டின் விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் மூன்று பிரிவுகளில் நான்கு இலங்கையர்கள் அதாவது 3 வீரர்களும் ஒரு வீராங்கனையும் இடம்பிடித்துள்ளனர்.

ஒவ்வொரு விருதுக்கும் 4 வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் வளர்ந்துவரும் வீரருக்கான பரிந்துரையில் இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் சகலதுறை வீரர் கமிந்து மெண்டிஸ் இடம்பெற்றுள்ளார்.

கமிந்து மெண்டிஸ் இந்த ஆண்டில் குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கினார். இந்த ஆண்டில் மாத்திரம் 1,451 ஓட்டங்களை குவித்ததுடன் பந்துவீச்சில் 5 விக்கெட்களையும் களத்தடுப்பில் 23 பிடியெடுப்புகளையும் எடுத்துள்ளார்.

ஆண்டின் சிறந்த ரி20 வீராங்கனைக்கான பரிந்துரையில் இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து இடம்பெற்றுள்ளார். அவர் இந்த ஆண்டில் 21 விக்கெட்களையும் 720 ஓட்டங்களையும் களத்தடுப்பில் 8 பிடியெடுப்புகளையும் எடுத்துள்ளார்.

மேலும் ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரருக்கான பரிந்துரையில் இலங்கையின் குசல் மெண்டிஸ் மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் போட்டியிடுகின்றனர். குசல் மெண்டிஸ் இந்த ஆண்டில் ஒருநாள் போட்டிகளில் 17 இன்னிங்ஸ்களில் 742 ஓட்டங்களைப் பெற்றதோடு 53 ஓட்ட சராசரியை பதிவு செய்தார். இதில் ஆறு அரைச்சதம் மற்றும் ஒரு சதம் அடங்கும். வனிந்து ஹசரங்க ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 26 விக்கெட்டுகளை வீழ்த்தி 5.36 சராசரியை பெற்றதோடு துடுப்பாட்டத்தில் 87 ஓட்டங்களைப் பெற்றார்.

2024 ஐ.சி.சி. விருதுப் பட்டியலுக்கு 12 விருதுகள் அடங்குகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் அணிகள், வீர, வீராங்கனைகள், ரசிகர்கள் வாக்கெடுப்பு மற்றும் கிரிக்கெட் நிபுணர் குழு ஒன்றின் ஒப்புதல் உடன் தேர்வு செய்யப்படும். தவிர ஆண்டின் ஐந்து சிறந்த அணிகள் இந்த நடுவர் குழுவால் தேர்வு செய்யப்படவுள்ளது. இந்த விருது விபரம் எதிர்வரும் ஜனவரி கடைசியில் வெளியிடப்படவுள்ளது.

# இந்தியாவை வீழ்த்தி டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி வாய்ப்பை பிரகாசப்படுத்திய ஆஸி.

## இலங்கையின் கனவு இந்தியாவின் வெற்றியில்

*(அகீல் சிஹாப்)*

ரோஹிட் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் 3 போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமநிலை வகித்த நிலையில் 4வதாக பொக்சிங் டே டெஸ்ட் போட்டி கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று நிறைவுக்கு வந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 474 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய இந்திய அணி 369 ஓட்டங்களை சேர்த்தது.

அதன்படி 105 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த ஆஸி. அணி 234 ஓட்டங்களைச் சேர்த்தது. இறுதியாக இந்திய அணியின் வெற்றியிலக்காக 340 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. குறித்த இலக்கை நோக்கி நேற்றைய 5ஆவது நாள் ஆட்டத்தில் களமிறங்கிய இந்திய அணி 155 ஓட்டங்களுக்குள் சுருண்டு போக அவுஸ்திரேலிய அணி 184 ஓட்டங்களினால் வெற்றியீட்டி தொடரில் 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஆஸி. அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது. அடுத்து 03ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியாவுடனான 5ஆவது போட்டியில் ஆஸி. அணி வெற்றியீட்டினால் தென்னாபிரிக்காவுடன் இறுதிப்போட்டியில் விளையாட தகுதிபெற்றுவிடும்.

மாறாக அடுத்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றியீட்டினால் மாத்திரம் இலங்கை அணிக்கு வாய்ப்பு இறுதிப்போட்டி வாய்ப்புக் காணப்படுகிறது. மேலும் ஆஸி. அணியுடன் நடைபெறவுள்ள இரு டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற வேண்டும்.





# ஆஸி. ஓபனிலிருந்து விலகும் முன்னணி வீராங்கனை

ஜனவரி மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகும் அடுத்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து 2 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரும் முன்னாள் முதல் தர வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா ஹாலெப் விலகுவதாக அறிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டின் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் அடுத்த மாதம் 12ஆம் திகதி தொடங்கி 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்று ஜனவரி 6 முதல் 9 வரை நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்தத் தொடரிலிருந்து கால்முட்டி மற்றும் தோள்பட்டை வலியால் அவதிப்படும் சிமோனா ஹாலெப் அதிலிருந்து முழுமையாக மீளாததால் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகும் முடிவை எடுத்துள்ளார்.

# பயிற்சிக்காக டுபாய் பயணித்த இளம் வேகப்பந்து வீச்சாளர் ரிம்சி

*(றிஹ்மி ஹக்கீம்)*

கஹட்டோவிட்டவைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ரிம்சி தனது இலக்கின் அடுத்த கட்டத்தை அடையும் நோக்கில் கடந்த சனிக்கிழமை டுபாய்க்கு பயணமானார்.

தனது பாடசாலை பருவத்திலிருந்து மெய்வல்லுனர் போட்டிகளில் பிரகாசித்து வந்த ரிம்சி, எயார்டல் நிறுவனம் நடத்திய வேகப்பந்துவீச்சாளருக்கான போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதல் 10 இடங்களுக்குள் தேர்வு செய்யப்பட்டதன் மூலம் ஒரு சிறந்த பந்துவீச்சாளராக அடையாளம் காணப்பட்டார்.

அதிலிருந்து தனது பயணத்தை ஒரு சிறந்த பந்துவீச்சாளராக வரவேண்டும் என்ற கோணத்தில் ஆரம்பித்து ஒரு கட்டத்திலும் பல படி முறைகளை தாண்டி சர்வதேச வீரர்களுக்கும் வலைப் பயிற்சி பந்துவீச்சாளராக திகழும் அளவுக்கு தற்போது தனது திறமையை வளர்த்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் டுபாய் நாட்டில் உள்ள கர்வான் கிரிக்கெட் கழகத்தில் இரண்டு மாத ஒப்பந்த அடிப்படையில் பயிற்சிக்காக கடந்த சனிக்கிழமை அந்நாட்டுக்குப் புறப்பட்டு சென்றார். இந்த பயிற்சிக் காலம் அவருக்கு வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் அந்த கழகத்தில் நிரந்தரமாக விளையாடக் கூடிய சந்தர்ப்பம் கிட்டும்.

பொருளாதார ரீதியில் ஆரம்பம் முதலே மிகவும் கஷ்டப்பட்ட இவருக்கு ஒவ்வொரு கட்டத்திலும் பலரும் தம்மால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றனர் என்பதையும் சிலர் ஆரம்பம் முதல் இன்று வரை இவரின் பயணத்தில் உறுதுணையாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# படுதோல்வியடைந்த இலங்கை தொடரையும் இழந்தது

*(அகீல் சிஹாப்)*

நியூசிலாந்து அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் இரண்டாவது போட்டியிலும் 45 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி தொடரை இழந்தது.

ரி20 தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 8 ஓட்டங்களினால் பரிதாப தோல்வியை சந்தித்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று மவுண்ட் மௌங்கானுவில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 186 ஓட்டங்களைச் சேர்த்தது. பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தாலும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பல் காரணமாக 19.1 ஓவரில் சகல விக்கெட்களையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் நியூசிலாந்து அணி தொடரையும் கைப்பற்றியது. தொடரின் மூன்றாவதும் இறுதிமான போட்டி நாளை மறுதினம் (02) நெல்சனில் அதிகாலை 5.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.






# முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஹரியானா ஸ்டீலர்ஸ்

11 ஆவது புரோ கபடி லீக் தொடரின் சம்பியன் பட்டத்தை ஹரியானா ஸ்டீலர்ஸ் அணி முதல் முறையாக தட்டிச் சென்றது.

12 அணிகள் பங்கேற்ற 11ஆவது புரோ கபடி லீக் போட்டி கடந்த ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி தொடங்கியது. இந்த கபடி திருவிழாவில் லீக், நொக்-அவுட் சுற்று, அரையிறுதி ஆட்டங்களின் முடிவில் ஹரியானா ஸ்டீலர்ஸ் அணியும், பாட்னா பைரேட்ஸ் அணியும் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

சம்பியன் அணியை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டி புனேவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொடக்கம் முதலே இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தன. முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் 15-12 என்ற புள்ளிக்கணக்கில் ஹரியானா ஸ்டீலர்ஸ் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளை எடுத்தன. இறுதியில் ஆட்ட நேர முடிவில் 32-23 என்ற புள்ளிக்கணக்கில் பாட்னா பைரேட்ஸ் அணியை வீழ்த்தி ஹரியானா ஸ்டீலர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றது.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை ரைஸ்டார் வெற்றி

*(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)*

அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக் செயலாளர் எம்.எச்.எம்.அஜ்வத் வழி நடத்தலில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் அக்கரைப்பற்று சூ சிற்றி விளையாட்டுக் கழகத்தை 3 : 2 என்ற கோல் அடிப்படையில் ரைஸ்டார் கழகம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7